Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 5 வியாழக்கிழமை (18-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:52



47 மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள் 'பொங்கு தமிழ்' நிகழ்வில் பங்குகொள்வதற்காக யாழ்.பல்கலைக்கழகம் நோக்கி நேற்றுக் காலை வந்த சமயம் தடை நிலையத்தில் பொலீஸ் அதிகாரி ஒருவரால் தடுக்கப்படுவதை முதலாவது படத்திலும் உள்ளே செல்ல அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து அவர்கள் திரும்பிச் செல்வதை அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம். (மேலும் படங்கள் 5ஆம் 11ஆம் பக்கங்களில்)

# உணர்ச்சிபூர்வமாக நடைபெற்ற 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு!

## ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் திரண்டனர்

யாழ்ப்பாணம்,ஜனவரி18

**யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது. பல்கலைக் கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என ஐயாயிரம் பேர் இந்நிகழ்வில் திரண்டு பங்குபற்றினர்.**

எழுச்சி நிகழ்வை ஒட்டி கடந்த இரு தினங்களாக யாழ்.பல்கலைக் கழகத்தைச் சூழ போடப்பட்டிருந்த பொலீஸ் காவல் நேற்று மேலும் இறுக்கப்பட்டது. இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். பவள் கவச வாகனங்கள், ஜீப்புகள், 'பிக்-அப்' வாகனங்கள், பஸ்கள் என்பன ஆங்காங்கே கொண்டு வந்து நிறுத்தப்பட்டு துருப்புகளால் பல்கலைக்கழக வளாகம் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலும் எழுச்சி

வவுனியா,ஜன.18

வவுனியாவில் உள்ள யாழ். பல்கலைக்கழக வளாகத்திலும் நேற்று 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடத்தப்பட்டன.

வளாக மாணவர்கள், விரிவுரையாளர்கள், சமயத் தலைவர்கள் என நூற்றுக் கணக்கானோர் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். வளாகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய பதாகைகள் கட்டப்பட்டிருந்தன.

கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்திலும் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்றன. (உ-7-164)

## பொங்கு தமிழ்ப் பிரகடனம்

யாழ்ப்பாணம்,ஜன.18

நேற்றைய எழுச்சி நிகழ்வின் முடிவில் பொங்கு தமிழ்ப் பிரகடனம் வெளியிடப்பட்டது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

"இந்தப்பொழுது திரண்டிருக்கும் எங்களின் ஆத்மாவின் குரலை ஒரே சுருதியில் வெளிப்படுத்துகின்றோம். அரசு இந்தக் கொடிய யுத்தத்தினை உடனே நிறுத்த வேண்டும். அர்த்தமும் நீதியுமான பேச்சு வார்த்தையினை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடன் ஆரம்பிக்க வேண்டும். இதன் வழி தமிழ் மக்களின் நீண்டகால ஆத்ம வெளிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## எழுச்சி நிகழ்வு மாபெரும் வெற்றி மனிதநேய அமைப்புகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.18

'பொங்கு தமிழ்' எழுச்சி நடந்தேறிய முறையை நோக்கும் போது அது மாபெரும் வெற்றியே.

- இப்படி அறிவித்திருக்கின்றது 47 மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம்.

'பொங்கு தமிழ்' நிகழ்வில் பங்குபற்றுவதற்காக நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழகத்தை நோக்கிச் சென்ற ஒன்றியப் பிரதிநிதிகள் பரமேஸ்வராச் சந்தியில் வைத்து பொலீஸாரால் வழிமறிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதையடுத்து ஒன்றிய அலுவலகத்தில் கூடி அவர்கள் ஆராய்ந்தனர்.

இது குறித்து ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

(11ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸாருக்கு 'டிமிக்கி' விட்ட பொதுமக்கள், மாணவர்கள்

யாழ்ப்பாணம்,ஜன.18

எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்வதற்கு பொதுமக்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் பொலீஸார் அனுமதி மறுத்த போதும், பல்கலைக் கழகம் சாரா பொதுமக்களும், மாணவர்களும் என சுமார் ஐந்நூறு பேர் பொலீஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத்தைச் சூழவிருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## 2 அதிகாரிகள் உட்பட 60 படையினர் எழுதுமட்டுவாழ் சமரில் உயிரிழப்பு!

கொழும்பு,ஜன.18

கிளாலி, எழுதுமட்டுவாழ் பகுதிகளிலுள்ள முன்னரங்க நிலைகளிலிருந்து ஆனையிறவை நோக்கி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட 'கினிகிர-9' இராணுவ நடவடிக்கை 2 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

பொன்னார், ஆவரங்காடு ஆகிய இடங்களை உள்ளடக்கிய ஏழு சதுரக் கிலோமீற்றர் பிரதேசத்தைப் படையினர் மீட்டுள்ளனர் என்றும -

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் 36 சடலங்கள் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.18

எழுதுமட்டுவாழ், கிளாலிப் பகுதிகளில் இடம்பெற்ற சண்டையில் மீட்கப்பட்டதாகத் தெரிவித்து மேலும் 16 சடலங்கள் நேற்று மாலை யாழ்.ஆஸ்பத்திரியில் படையினரால் ஒப்படைக்கப்பட்டன.

அவற்றுள் 13 சடலங்கள் பெண்களுடையவை.

அதேசமயம் - நேற்று அதிகாலை ஒரு மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருந்த 20 சடலங்களும் 'செஞ்சிலு

(12ஆம் பக்கம் பார்க்க)



'பொங்கு தமிழ்' நிகழ்வில் பங்குபற்றுவதற்காக யாழ்.பல்கலைக்கழக முன் மைதானத்தில் திரண்ட மாணவர் கூட்டம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வருடாந்த ஒன்றுகூடல்

வலிகாமம்.மேற்கு,ஜன.18

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேசசெயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபரும் தெல்லிப்பழை பிரதேச செயலருமான திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போலும் கலந்துகொள்ளவுள்ளனர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

(ஜ-15)

## பாடசாலைக்கு புதிய கட்டடம்

சண்டிலிப்பாயில் இயங்கிவரும் கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலையில் இரண்டு லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, புதிய கட்டடத்தினை திறந்து வைத்தார். வலி. தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்

ஈ.பி.டி. நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட இரண்டு லட்ச ரூபா செலவில் இப்புதிய கட்டடம் அமைக்கப்பட்டது.

(ஜ)

## ஆராதனை விழா

வட இலங்கை சங்கீத சபையினர் நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஆராதனை விழா எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரி சிவகுருநாதர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஜ-152)


லஷ்சுமி

இணுவில்

விஜயகாந்த் (இருவேடம்)
மீனா நடித்த

வானத்தைப் போல

(ரீலஸ்)
காட்சிகள் 10.30, 2.30 (ப.நே.)

(83054)



## கனனி புலமைப்பரிசில் பரீட்சை - 2001/2002

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்திற்கான (பொது அறிவு, நுண்ணறிவு) பரீட்சைகள் எதிர்வரும் 21.01.2001 அன்று நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பப் படிவக் கட்டணம் செலுத்தி பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் உடனடியாக எமது யாழ்ப்பாண, வடமராட்சி கிளைகளில் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை (**Admission Card**) பெற்று அதில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றவும்.

இலவச பரீட்சைக் கட்டணத்துடனான பரீட்சார்த்திகள் தங்களிடம் உள்ள பரீட்சை அனுமதி அட்டையினை (**Admission Card**) பின்வரும் பாடசாலைகளில் உள்ள பரீட்சை மண்டபங்களில் சமர்ப்பித்து பரீட்சைக்கு தோற்றலாம்.

யாழ்ப்பாணக் கிளையில் விண்ணப்பித்தோர் : **J/Jaffna Hindu College**
**J/Jaffna Hindu Ladies College**

வடமராட்சிக் கிளையில் விண்ணப்பித்தோர்:
**J/Vadamarachchi Ladies College**

*பரீட்சை திகதி: 21. 01. 2001* *காலை :10. 30* **a.m.**

# DCS

## COLLEGE OF COMPUTER TECHNOLOGY

124, Palaly Road, Thirunelvely T.P. No: 021 - 2596 N.M.M.V. Road, Nelliyadi. (C/14895)


# APPRECIATION

MR.D.R.Arumaynayagam, Assistant Director of English, Jaffna Zone I, retired from service on 31 st December 2000. We highly appreciate his dedicated service and his sterling qualities. A jovial and a dynamic personality, a jewel of a man, a gem of a Director of English, a humble and a simple servant. He won the hearts of all English teachers by his affable ways. We will always remember him with love and gratitude.

**TEACHERS OF ENGLISH,**
**Kokuvil Hindu College, Kokuvil.**

(83032)

**(This appreciation appeared in Uthayan on 17.01.2001. We regret for the errors)**

உ

ஸ்ரீ ராமஜெயம்

# திருமண அழைப்பு

நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ மங்களமிகு விக்கிரம வருஷம் உத்தராயணம் கிருஷ்ணபக்ஷம் தை மாதம் 6ஆம் நாள் (19-01-2001) தசமி திதியும் அனுஷ நக்ஷத்திரமும் வெள்ளிக்கிழமையும் கூடிய சுபமுகூர்த்த கும்பலக்கினத்தில்

*இலுப்பைத்தாழ் முருகன் தேவஸ்தான*
*ஆதின குரு கு.சிவானந்தக் குருக்கள்,*
*இலங்கை இந்துமத குருபீடாதிபதி*
**சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவசிவாச்சாரியார்**
*ஆகியோரின் பௌத்திரனும் எமது சீமந்த புத்திரனுமாகிய*
சிரஞ்சீவி

**நித்யசிவதாண்டவ சர்மாவுக்கு**

(வடலியடைப்பு புதறானை ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானம், பாரத்தனை ஐயனார் தேவஸ்தானம்)

*புன்னாலைக்கட்டுவன்*
குகநாத சர்மாவின பௌத்திரியும்
*எமது கனிஷ்ட புத்திரியுமாகிய*
சௌபாக்யவதி

**புரந்தரியை**

**முகூர்த்தம்:- காலை 8-13 முதல் 8-31 வரை**

பாணிக்ரகண கன்னிகாதான திருமாங்கல்ய தாரணம் மணமகளில்லத்தில் நடைபெற திருவருளும் பெரியோரின் ஆசியும் கைகூடியுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர பந்துகளுடன் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**சமாவர்த்தனம்:- அன்று அதிகாலை 4.00மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**
**வதுவரக்ரகப்பிரவேசம்:- அன்று பிற்பகல் 2.00 மணிக்கு.**

தங்கள் நல்வரவை நாடும்

**சிவஸ்ரீ சிவ.நித்தியானந்தக்குருக்கள்**
*தம்பதியினர்*
*('சிவானந்த பவனம்' முருகமூர்த்தி வீதி, சங்காலனை)*

**பிரம்மஸ்ரீ கு.சோதிநாதசர்மா**
*தம்பதியினர்*
*(ஆயக்கடவை பிள்ளையார் கோயிலடி, புன்னாலைக்கட்டுவன்)*

**வரவேற்பு:- ஸ்ரீமதி சாம்பசிவசிவாச்சாரியார் குடும்பத்தினர்**

*(இருவீட்டார் அழைப்பு)*

(83063)

## யா/நடேஸ்வரக் கல்லூரியின் நூற்றாண்டு விழா தொடர்பான கலந்துரையாடல்

*இடம் - யூனியன் கல்லூரி, மருதனார்மடம்.*
*காலம் - நாளை மறுதினம் (20-01-2001) சனிக்கிழமை.*
*நேரம் - பி.ப 3.00 மணி (S.L.T)*

மேற்படி பாடசாலையின் நூற்றாண்டு விழா தொடர்பான கலந்துரையாடலில் லண்டன் நகரப் பழைய மாணவர் சங்க (யா/நடேஸ்வரக் கல்லூரி) செயலாளரும், நடேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவருமான திரு.ரகு அவர்கள், தற்போதைய நடேஸ்வரக் கல்லூரியின் முன்னேற்றம் பற்றியும், அதற்கான தேவைகள் எவை என்பன பற்றியும் பாடசாலை வளர்ச்சிக்கான சகல வழிவகைகள் பற்றியும் ஆராயவும், கலந்துரையாடவும் விரும்புகிறார். இக்கலந்துரையாடலிற் கலந்து கொண்டு எல்லாவிதமான ஆலோசனைகள், அபிப்பிராயங்கள் என்பவற்றைத் தெரிவித்து இப்பாடசாலையின் வளர்ச்சிக்குத் தோள்கொடுக்குமாறு அனைத்துப் பழைய மாணவர்களையும் பெற்றோர்களையும் நலன்விரும்பிகளையும் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர் செயலாளர்.

**பழைய மாணவர்சங்கம்,**
**நடேஸ்வரக் கல்லூரி காங்கேசன்துறை.**

(C/14884)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1926 - 06 - 21

மறைவு 2000 - 01 - 30

அமரர்

## பொன்னையா கனகசுந்தரம்

(இளைப்பாறிய சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர், ரண வைத்தியர்)

### திதி:- 18.01.2001

*மண்ணில் நல்ல வண்ணம் வாழ நாம்*
*எண்ணில் சிறப்புகள் எய்திட எமதருகிருந்து*
*என்றும் உறுதுணையாய் வழியிட்ட தலைவா!*
*இன்றும் இனியும் உம் நினைவு மறவோமே!*
*நும்பிரிவு தாங்காது தவித்த போதும்*
*எம் நினைவோடும் நிழலோடும் ஒன்றிவிட்டீர்!*
*உங்கள் அன்பொடு பண்பும் நிறைபக்தியும்*
*சங்கரன் கழல் சேர்ந்து சாந்தி பெறுகவே!*

*"இராச பவனம்",*
*வட்டுமேற்கு,*
*வட்டுக்கோட்டை.*

(C/14879)

பிரிவால் துயருறும்:
மனைவி,மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


வாணி

கல்வி நிறுவனம்

சுன்னாகம்

பொருளியல்
திரு.P.மோகன்

**2001, 2002, 2003**
அனைத்துப் பிரிவுகளுக்கான
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன

(83067)



நாகம்ஸ்

சுன்னாகம்

டைட்டானிக்

(தமிழ் ~ ரீலஸ்)

இது ஓர் உண்மைச் சம்பவம்.

காட்சிகள்:
10.30, 2.30 (புதிய நேரம்)

(83050)



ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந்த், சிம்ரன், லைலா, ரகுவரன், வையாபுரி
மற்றும் பலரின் நடிப்பில்

*பார்த்தேன் ரசித்தேன்*

காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.)

(C/14851)


# மரண அறிவித்தல்

## சுப்பு தங்கராசா

(கார்ச்சாரதி No.3 SRI 5057)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது தாவடி தெற்கு, பத்திரகாளிகோயிலடி, சுதுமலையில் வசித்தவருமாகிய சுப்பு தங்கராசா 14.01.2001 அன்று அகாலமரணமானார்.

அன்னார் சுப்பு - சின்னம்மாவின் அன்புப் புதல்வரும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், வைத்தியலிங்கம், இராசலிங்கம், தர்மபாலா (கனடா), இராசமலர், சரசுவதி, மகேஷ்வரி, காலஞ்சென்ற மகாலிங்கம், அய்யாத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் தயாபரன், சாமினி, சரனி, ஜானு ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தாவடிதெற்கு,*
*பத்திரகாளிகோயிலடி,*
*சுதுமலை.*

(83080)

தகவல்:
சுப்பு வைத்தியலிங்கம்
(சகோதரன்)

# உதயன்

## ஒற்றுமையின் வெற்றி!

ஈழத் தமிழ் மக்களின் பிரதான அரசியல் வேணவா—அபிலாசை— தமது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதாகும். அதே வேளை சமாதானத்தை விரும்பும் மக்கள் அவர்கள், அமைதியாக வாழ்வதே அவர்களின் அவா.

இலங்கை அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு குறித்த முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் காலம் இது.

இலங்கையின் இனப் பிரச்சினையை மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடனேயே தீர்க்க வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது, அதனால் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பும் செல்வாக்கும் கணிசமாக இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், தமிழர்கள் ஒரே குரலில் எதனை ஒலிக்கிறார்கள் என்பதனை அறிய வெளி உலகம் விரும்புவது இயல்பு. அதனைக் கருதியே நேற்றைய ''பொங்கு தமிழ்'' நிகழ்வு.

தமிழ் மக்கள் ஒரே குரலில், தமது ஆத்மார்த்தமான அரசியல் அபிலாசையை வெளிப்படுத்தவேண்டிய ஒரு தேவை உண்டு. அதன் பொருட்டே ''பொங்கு தமிழ்'' நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வைப் பல்கலைக்கழக சமூகம் முன்னெடுத்தது. அதனைக் காரணமாக வைத்து இந்நிகழ்வுக்கு பல்வேறு முத்திரைகளைக் குத்த முயலப்பட்டது; தடை செய்யும் பாணியில் மிரட்டல்களும் இடம் பெற்றன.

இத்தகைய பின்னணியில், பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்வதால் உண்டாக்கக் கூடிய விருப்பத்தகாத விளைவுகளைத் தவிர்க்கும் பொருட்டு அவர்களை அணிதிரள்வதைத் தவிர்க்குமாறு கேட்டுப் பல்கலைக்கழகச் சமூகம் விவேகமாகச் செயற்பட்டது. முன் எவத்த காலைப் பின் எவக்காது அமைதி நிகழ்வை வெற்றிகரமாக நடத்தியது.

ஜனநாயகத்தின் முதன்மைப் பண்புகளில் ஒன்றான மக்களின் கருத்துச் சுதந்திரத்தை ஒரே குரலில் ஒலிக்கும் முயற்சியை, மறைமுகமாகத் தடுக்க முயன்றமை அப்பட்டமான அடக்கு முறையாகும். அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடு அதற்கு அபகீர்த்தியையே உண்டாக்கி உள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஜனநாயகம் நிலவுவதாகக் காட்டுவதற்குப் போரின் மத்தியிலும் தேர்தல்களை நடத்திய அரசாங்கம், சந்தர்ப்ப ரீதியான தேவை கருதி மக்கள் தமது கருத்தை அமைதியான முறையில் தெரிவிக்க விழைந்த வேளை, அதனை மறைமுகமாகத் தடுத்தது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

அதிகாரிகள் தமது செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கு எந்தவித காரணத்தையும் கூறலாம். ஆனால் ஜனநாயக ரீதியான செயற்பாட்டுக்கு குந்தகம் விளைவித்தார்கள் என்ற அவப்பெயரை என்ன விதத்தாலும் அகற்ற முடியாது.

அதிகாரமும், ஆயுதமும் தம்மிடம் உள்ளதால் அதிகாரிகள் மக்களின் மன உணர்வுகளையும் உரிமைகளையும் தூசாக மதித்துச் செயற்படக் கூடாது.

ஆலயங்களில் மணி ஒலித்துப் பிரார்த்தனை செய்தும், வர்த்தக நிலையங்களை மூடியும், போக்குவரத்தைத் தவிர்த்தும் மக்கள் தமது ஆதரவை 'பொங்கு தமிழ்' அமைதி நிகழ்வுக்குத் தெரிவித்து விட்டார்கள். மக்களின் ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி இது!

# யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் ஆரம்பிக்குக!

## ''பொங்கு தமிழ்'' எழுச்சி நிகழ்வில் துணை வேந்தர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 18

இன்று உருவாகியுள்ள சமாதான சூழலைப் பயன்படுத்தி யுத்தத்தை நிறுத்தி 3 ஆம் தரப்பின் மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க இலங்கை அரசு முன்வரவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று நடந்த 'பொங்குதமிழ்' நிகழ்வில் கலந்து பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேலும் கூறியதாவது:-

யாழ். பல்கலைக்கழகச் சமூகம் சமாதான முயற்சிகளுக்கு என்றும் ஒத்துழைப்பு வழங்கும்.

இன்றைய சமாதான சூழலைப் பயன்படுத்தி 3 ஆம் தரப்பு மத்தியஸ்த உதவியுடன் சமாதானப் பேச்சுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்த சமாதான முயற்சிகள் எமது நீண்டகால குறைபாடுகளை நிவர்த்தி செய்வதுடன் எமது அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாகவும் அமைய வேண்டும்.

சர்வதேச ரீதியில் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக சமூகம் என்பன பொதுவாக சமுதாய மேம்பாட்டுக்காக உழைப்பது வழமை.

இந்த வகையில் எமது நாட்டில் கடந்த பல தசாப்தங்களாக நடைபெறும் யுத்தம் காரணமாக பெரும் உயிர்ச்சேதம், பொருள் சேதம் ஏற்பட்டுள்ளன. தமிழ் மக்கள் பல இடையூறுகள், துன்பங்களுக்கு உட்பட்டுள்ளனர்.

தொடரும் யுத்தத்தினால் தமிழர்கள் தங்கள் வேர்கள் அறுந்த நிலையில் வாழ்கிறார்கள் இந்த நிலை மேலும் நீடிக்கக் கூடாது—என்றார்.

### யுத்தத்தை நிறுத்துக!

யாழ். பல்கலைக்கழக எழுதுநர், தொழில் நுட்பவியலாளர் சங்கப்பிரதிநிதி பேசுகையில் கூறியதாவது:

யுத்தத்தினால் சீரழிந்த பூமியில் வாழும் மக்களாகிய நாங்கள் பேரழிவு தரும் இந்த யுத்தத்தை அரசாங்கம் நிறுத்துவதற்கும் சமாதானப் பேச்சுக்களைத்தொடங்குவதற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று சர்வதேச உலகைக் கோருகின்றோம்.

எமது அபிலாஷைகளைப் பெற்றுத் தருவதற்கு தன்னாலான முயற்சிகளை விரைவாக மேற்கொண்டு எமது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுத்தர சர்வதேச சமூகம் முயலவேண்டும்.

நடைபெறுகின்ற இந்த யுத்தத்தைப் பார்க்கும்போது சமாதானத்தை அடைவதற்கான காலம் மிகவும் தொலைவில் இருப்பதாகவே எமக்கு படுகின்றது. இது மிகுந்த வேதனையைத் தருகின்றது.

இன்றைய இந்தப் பொங்கு தமிழ் நிகழ்விலே சமாதானத்தை வலியுறுத்தி, தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் முகமாக இந்தச் சமூகம் ஓரணியில் திரண்டுள்ளது.

### தொடரும் அழிப்பு

கொடூரமான யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பும் யுத்தத்தை உடனடியாக — நிரந்தரமாக — நிறுத்துவதற்கான வழிவகைகளில் தாமதிக்காது ஈடுபடவேண்டும்.

யுத்தத்தினால் இரு இனங்களிலும் அழிவு தொடர்ந்து கொண்டிருக்கின்றது இந்த யுத்தம் தொடருமேயானால் அது மேலும் பேரழிவுகளையே கொண்டுவரும்.

மிகுந்த எதிர்ப்பின் மத்தியில் மிகவும் உணர்வு பூர்வமாக இந்த நிகழ்வு நடந்தேறுகிறது. இது எவரது அழுத்தத்தினாலும் மேற்கொள்ளப்பட்டதல்ல. எமது உள்ளத்து உணர்வுகளை நாமாகவே வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வாகவே இது அமைந்திருக்கிறது. — என்றார்.

### தடுத்து நிறுத்தும் துப்பாக்கிகள்

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எஸ். ஆர்னோல்ட் உரையாற்றும்போது கூறியதாவது:-

அகிம்சையின் வழிவந்த எமது எழுச்சி நிகழ்வினைக் கூட அடக்குவதற்கு இராணுவக் கரங்களைப் பயன்படுத்தி நிற்கின்றமை இன்று உலகின் கண்களுக்குத் தெளிவாகத் தெரியத் தொடங்கியுள்ளது. எதுவித அரசியல் கலப்பில்லாத எமது நீதியான நேர்மையான, ஆத்மாவின் உணர்வு தொடர்பான எழுச்சி நிகழ்வில் ஆதங்கத்துடன் கலந்துகொள்ள விழைந்து நின்ற எம்மினிய மக்களை துப்பாக்கிகள் தடுத்து நிற்கின்றது. இது எமது நிகழ்விற்கு கிடைத்த மாபெரும் வெற்றி. யாழ். குடாநாட்டில் எவ்விதம் மக்கள் அடக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை சர்வதேச உலகிற்கு எடுத்துக் காட்டுவதில் எமது யாழ்.பல்கலைச்சமூகம் வெற்றி கண்டுள்ளது.

எமது தமிழ் மக்களின் அபிலாசைகள் இவை தான் என்று தெளிவாக மக்களின் மனங்களிலிருந்து வெளிக்கொணர்ந்து சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு அதனைக் கொண்டு வந்திருக்கின்றோம்.

இன்று எமது மக்கள் கேட்டு நிற்பதெல்லாம் எமது அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய சமாதானச் சூழலை உருவாக்குவதேயாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தைக்கான சமாதான சூழ்நிலையை உருவாக்கு முகமாக ஒருமாத கால ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். ஆனால் அரசாங்கமானது சமாதானத்திற்கான கதவுகளை மூடிவிட்டு பெரும் யுத்தத்திலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றது. மெத்தனப் போக்கை கண்டியுங்கள்.

எனவே சர்வதேச சமூகமே 'யுத்தத்தின் மூலம் கொழுந்து விட்டெரியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்' என்ற அரசின் மெத்தனப் போக்கைக் கண்டித்து வன்மையாகக் குரல் கொடுக்கும் அதேநேரத்தில் உடனடியாக இலங்கை அரசினை யுத்தத்தை நிறுத்திப் பேச்சுக்கான அமைதிச் சூழலை உருவாக்கி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் தமிழ் மக்களின் ஆத்ம அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யும் வகையில் சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ள வற்புறுத்துமாறு தமிழ்மக்கள் அனைவரும் இவ்வெழுச்சி நிகழ்வின் ஊடாகச் சர்வதேச சமூகத்தை மிகவும் ஆதங்கத்துடன் கேட்டுநிற்கின்றோம்.

சர்வதேசமே நிலையான ஆரோக்கியமான சமாதானச் சூழலை ஏற்படுத்த உருவாகியுள்ள தற்போதைய நிலையினைப் பயன்படுத்திக் கொள்ளும்படி இலங்கை அரசின் மீது பாரிய அழுத்தங்களைப் பிரயோகித்துஇலங்கை அரசினை போர் வெறியிலிருந்து மீட்டு சமாதான வழிக்கு இட்டுச் செல்லும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்—என்றார்.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க பிரதிநிதி எஸ். தேவராசா சமாதானம், சுயநிர்ணய உரிமை, தமிழர் தாயகம் போன்றவற்றை வலியுறுத்தி உரையாற்றினார்.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் எஸ் கலாராஜ், நிறைவேற்று அதிகாரிகள சங்கத் தலைவர் எஸ். சிறீதரன் ஆகியோரும் உரையாற்றினர்.

(-5)

## தென்மராட்சி மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜன. 18

மீசாலை விக்கினேஸ்வரா ம. வியில் கல்வி கற்று தற்போது இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்பவர்கள் தமது விவரங்களை கட்டைவேலி சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் அல்லது மானிப்பாய் மகளிர் கல்லூரியில் பதிவு செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வியில் கல்வி கற்றுத் தற்போது வேறு பாடசாலைகளில் கல்விகற்பவர்கள் தமது விவரங்களை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் பதிவு செய்யுமாறும் வேண்டப்படுகின்றனர். (உ-5)

★ ★ ★

மிருசுவில் றோ. க. த. க. வித்தியாலயத்தில் கல்விகற்று தற்போது இடம்பெயர்ந்துள்ள மாணவர்களை தமது தற்போதைய பாடசாலைமற்றும் வதிவிட விவரங்களை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் நெல்லியடியில் கிறிஸ்ரல் கல்வி நிலையத்தில் இயங்கும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் அல்லது வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் இயங்கும் மிருசுவில் றோ.க.த.க. வித்தியாலயத்தில் பதிவு செய்யுமாறு வித்தியாலய அதிபர் கேட்டுள்ளார். (உ.)

★ ★ ★

வடமராட்சி மற்றும் வலிகாமம் ஆகிய கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை மாணவர்களை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன் நெல்லியடி ம.ம. வித்தியாலயம், கெருடாவில் இந்து த. க. பாடசாலை ஆகியவற்றில் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

இவ்வாறு மாணவர்கள் பதிவு செய்யும் விவரங்களின் அடிப்படையிலேயே இலவசச் சீருடை, இலவச பாடநூல் என்பன வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## விளையாட்டு நிகழ்வுகள்

வை. எம். சி. ஏ. அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கிடையில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் இடம்பெறும் ஆண்கள் பிரிவு அணிகளுக்கான ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி — கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி.

★ பிற்பகல் 5 மணி — சென். ஜோன்ஸ் கல்லூரி அணி எதிர் யாழ். இந்துக் கல்லூரி 'ஏ' அணி. (உ-3)

★ ★ ★

யாழ். கல்வி வலயங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

நாளைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### நெல்லியடி ம. வியில்

★ 16 வயதுப் பிரிவு — யாழ் இந்து எதிர் உடுப்பிட்டி அ. மி. பாடசாலை.

★ 18 வயதுப் பிரிவு — யாழ். இந்து எதிர் ஹாட்லி,

### யாழ். இந்துவில்

★ 16 வயதுப்பிரிவு—யாழ். மத்திய கல்லூரி எதிர் புனித அந்தோனியார் கல்லூரி.

★ 18 வயதுப் பிரிவு — மானிப்பாய் இந்து எதிர் புனித அந்தோனியார் கல்லூரி. (உ-3-10-86)

## பெறுபேறு இன்று வெளியாகும்

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்பட்ட உடையமைத்தல், பின்இணைப்பு ஆகிய பயிற்சிகளில் கலந்துகொண்ட மாணவர்களின் பெறுபேறுகளை இன்று வியாழக்கிழமை தொடக்கம் மேற்படி பாடசாலையில் பெற்றுக்கொள்ளலாம் என்று அதிபர் சு. போகராசா தெரிவித்துள்ளார். (உ-10)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்க மத்தியஸ்தர் குழுவின் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்க மத்தியஸ்தர் குழுவில் இணைய விண்ணப்பித்தவர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-7)

### உதயவாக்கு

உன்னதமான ஒவ்வொரு வேலையும் முதலில் முடியாததாகவே தோன்றும்.

### நாளை

தை 06

வெள்ளிக்கிழமை

திதி: தசமி

முற்பகல் 11.43 வரை

நட்சத்திரம்: விசாகம்

காலை 8.00 வரை.

சுபநேரம்: 6 35—8.05

ராகுகாலம் 11.05—12.35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 18

இம்மாதம் 16 ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

[171516ஏ],

**சாவகச்சேரி**

[168228ஏ], [168228பி], [168228சி].

**யாழ்ப்பாணம்**

[170963ஏ], [171211ஏ], [171226ஏ], [154012ஏ], [161024ஏ], [161025ஏ], [168541ஏ], [168775ஏ], [168775பி], [168805பி], [170954ஏ], [171764ஏ], [171764பி], [171764சி], [171872ஏ], [173763ஏ], [173763பி], [173763சி], [173763டி], [173812ஏ], [175305ஏ], [175305பி], [175305சி], [175309ஏ], [175325ஏ], [175354ஏ], [175354பி], [175362ஏ], [175362பி], [175362சி], [175374ஏ], [175374பி], [175655ஏ], [175655பி], [175681ஏ], [175687ஏ], (175687பி), (175687சி), (178035ஏ), (178035பி), (178035சி), (178058ஏ), (178101ஏ), (178101பி), (178132ஏ), (178159ஏ), (178159பி), (178159சி), (178159டி), (178157ஈ), (178177ஏ), (178190ஏ), (178190பி), (178190சி), (178194ஏ), (178194பி), (178196ஏ), (178197ஏ), (178198ஏ), (178198பி), (178222ஏ), (178228ஏ), (178228பி), (178228சி), (178228டி), (178228ஈ), (178228எவ்), (178228ஜி), (178228எச்), (178235ஏ), (178235பி), (178238ஏ), (178245ஏ), (178245பி), (178245சி), (178245டி), (178245ஈ), (178254ஏ), (178254பி), (178254சி), (178254டி), (178254ஈ), (178254எவ்), (178261ஏ), (178261பி), (178261சி), (178264ஏ), (178264பி), (178264சி), (178264டி), (178283ஏ), (178283பி), (178299ஏ), (178307ஏ), (178307பி), (178322ஏ), (178322பி), (178352ஏ), (178356ஏ), (178357ஏ), (178357பி), (178357சி), (178376ஏ), (178466ஏ), (178506ஏ), (178506பி), (178506சி), (17850டி), (178805ஏ), (179814ஏ), (179819ஏ), (179823ஏ), (179825ஏ), (179825பி), (179844ஏ), (179852ஏ), (179889ஏ), (179889பி).

**கரவெட்டி**

(168618ஏ), (178082ஏ), (178178ஏ).

**கோப்பாய்**

(128264ஏ), (170441ஏ), (170442ஏ), (170496ஏ), (170496பி), (170496சி), (170496டி), (171250ஏ), (173360ஏ), (177037ஏ), (177037பி), (177037சி), (177075ஏ), (177079ஏ), (177079பி), (177218ஏ), (177221ஏ), (177221பி), (177221சி), (177259ஏ), (177265ஏ), (177274ஏ), (177274பி), (177288ஏ), (177288பி), (177290ஏ), (177298ஏ), (177298பி), (177305ஏ), (177305பி), (177313ஏ), (178031ஏ),

**மருதங்கேணி**

(171277ஏ),

**நல்லூர்**

[170702ஏ], [170704ஏ], [170705ஏ], [171201ஏ], [171215ஏ], [171228ஏ], [171253ஏ], [171254ஏ], [171358ஏ], [171278ஏ], [174612ஏ], [173967ஏ], [173967பி], [177064ஏ], [177105ஏ], [177109ஏ], [177112ஏ], [177112பி], [177112சி], (177112டி), (177112ஈ), (177112எவ்), (177112ஜி), (177122ஏ), (177122பி), (177122சி), (177122டி), (177122ஈ), (177126ஏ), (177127ஏ), (177131ஏ), (177232ஏ), (177269ஏ), (148102ஏ), (148102பி), (163627ஏ), (168581ஏ), (168581பி), (168581சி), (168667ஏ), (168667பி), (168775சி), (171758ஏ), (171758பி), (171833ஏ), (173593ஏ), (173593பி), (175380ஏ), (175470ஏ), (175470பி), (175515ஏ), (175515பி), (175515சி), (175562ஏ), (178021ஏ), (178026ஏ), (178032ஏ), (178032பி), (178038ஏ), (178120ஏ), (178136ஏ), (178136பி), (178150ஏ), (178150பி), (178168ஏ), (178168பி), (178168சி), (178205ஏ), (178205பி), (178206ஏ), (178223ஏ), (178223பி), (178236ஏ), (178236பி), (178262ஏ), (178281ஏ), (178281பி), (178281சி), (178282ஏ), (178282பி), (178282சி), (178288ஏ), (178288பி), (178302ஏ), (178313ஏ), (178315ஏ), (178337ஏ), (178348ஏ), (178418ஏ), (178418பி), (178756ஏ), (178756பி), (178756சி), (178756டி), (179136ஏ), (179824ஏ), (179826ஏ), (179851ஏ)

**உடுவில்**

(171213ஏ), (173934ஏ), (173935ஏ), (174014ஏ), (174073ஏ), (174073பி), (177025ஏ), (177041ஏ), (177066ஏ), (177087ஏ), (177092ஏ), (177092பி), (177092சி), (177092டி), (177228ஏ), (177257ஏ), (177263ஏ), (177291ஏ), (178291பி), (177291சி), (177291டி), (177308ஏ), (179517ஏ), (179517பி), (179517சி),

**வேலணை**

(171218ஏ) (ம-10)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**கலைப்பீடப் பரீட்சைகள் -2000**

முதற்கலை-முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2000

இரண்டாம் வருட - முதலாம் அரையாண்டுப் பரீட்சை-2000

மீள் பரீட்சை - முதலாம் வருட அரையாண்டுப் பரீட்சை- 2000

மேற்குறித்த பரீட்சைகளுக்குத் தகுதியுடைய மாணவர்கள் கலைப்பீடாதிபதி அலுவலகத்திலிருந்து உரிய விண்ணப்பப் படிவங்களைப்பெற்றுகலைப்பீடாதிபதி அலுவலகம் உதவிப் பதிவாளருக்கு2001-01-31 ஆம் திகதிக்கு முன்னராகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள்பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 50வீதம் யாழ். பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

2001-01-31 ஆம் திகதிக்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

– பதிவாளர்

(சி/14866)


# மேல் நீதிமன்றம் 30 ஆம் திகதி ஆரம்பம்

யாழ். மாவட்ட மேல் நீதிமன்றத்தின் அமர்வுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் உள்ள கட்டடத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன,

சம்பிரதாய ஆரம்ப வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மல்லாகம், சாவகச்சேரி நீதிவான்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியாக கே.பி.எஸ். வரதராஜா பணியாற்றுவார்.

மேல் நீதிமன்ற அமர்வுகள் தொடர்பாக அவர். அண்மையில் யாழ்ப்பாணத்தின் சட்டத்தரணிகளை அழைத்து கூட்டமொன்றினை நடத்தியிருந்தார். (உ-5-86)


**கண்ணீர் அஞ்சலி**

**திருமதி நாகம்மா வேலுப்பிள்ளை**

எமது பாடசாலை உப அதிபர் செல்வி தனலட்சுமி வேலுப்பிள்ளை அவர்களின் அன்புத்தாயார்

திருமதி நாகம்மா வேலுப்பிள்ளை

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரின் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

பருத்தித்துறை. (சி/14874)


# அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தால் கடந்த ஆண்டு வலி. மேற்கில் ஒன்பது திட்டங்கள் பூர்த்தி

வலிகாமம் மேற்கு, ஜன. 18

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக நுண் கருத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்பது திட்டங்களின் பணிகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

இந்த ஒன்பது திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் 31லட்சத்து 62ஆயிரம் ரூபாவைச் செலவு செய்துள்ளது

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களின் தேவைகளே இத்திட்டங்களின் கீழ் பெருமளவு நிறைவேற்றப்பட்டுள்ளன.

அராலி வடக்கு செட்டியார் மடம், வட்டுக்கோட்டை செம்பாட்டான் தோட்டம் ஆகிய இடங்களில் இடம்பெயர்ந்த மக்கள் வசிப்பதற்கு 100 குடிசைகள் அமைப்பதற்கு 5 லட்சத்து 92 ஆயிரத்து 500 ரூபாவும் –

சங்கரத்தை, வட்டு. தென்மேற்கு. கலட்டி, தொல்புரம், பூதராசி ஆகிய இடங்களில் இடம்பெயர்ந்த மக்கள் வசிப்பதற்கு 70 குடிசைகள் அமைப்பதற்கு 4 லட்சத்து 71 ஆயிரம் ரூபாவும்—

இதே இடங்களில் மலசல கூடங்கள் அமைப்பதற்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் —

செட்டியார்மடம், செம்பாட்டான் தோட்டம், சங்கரத்தை கலட்டி, பூதராசி ஆகிய இடங்களில் இடம்பெயர்ந்த மக்கள் பாவிக்கும் கிணறுகளைத் திருத்தி அமைப்பதற்கு ஒரு லட்சத்து 5ஆயிரம் ரூபாவும்—

சங்கானை கப்பண்டா முகாமில் 55 குடிசைகள் அமைப்பதற்கு 11 லட்சத்து 22 ஆயிரம் ரூபாவும் —

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்துக்குப் புதிய கட்டடம் ஒன்றை அமைத்ததற்கு 3 லட்சத்து 81 ஆயிரம் ரூபாவும் —

வட்டு.வடக்கில் பலநோக்கு மண்டபம் ஒன்றை அமைத்ததற்கு 2 லட்சத்து 52ஆயிரம் ரூபாவும் —

மூளாயில் உள்ள முதியோர் இல்லத்துக்கு நீர் விநியோகம் செய்வதற்கு 55 ஆயிரம் ரூபாவையும் —

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் செலவிட்டுள்ளது. (ம-175)

# பாடநூல்கள் விநியோகத்தில் வலயத்துக்கு வலயம் வித்தியாசம்!

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல் விநியோகத்தில் வலயத்துக்கு வலயம் வித்தியாசம் காணப்படுவதாக பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்தவர்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் பாட நூல் விநியோகம் மிக மோசமாக இருப்பதாகவும்—

கடந்த ஆண்டில் குறிப்பிட்ட சில பாடங்களுக்குரிய நூல்கள் வலிகாமம் கல்வி வலயத்துக்கு முற்றாக வழங்கப்படவில்லை எனவும்—

ஆனாலும் யாழ் கல்வி வலயத்துக்குட்பட்ட சகல பாடசாலை மாணவர்களுக்கும் அவை வழங்கப்பட்டதாகவும் —

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு யாழ். கல்வி வலயத்தின் பாடசாலைகளைச்சேர்ந்த தரம் 8 மாணவர்களுக்குக் கணிதம், சமயம் ஆகிய பாடநூல்கள்வழங்கப்பட்டுள்ளன. ஆனால் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குக் குறிப்பிட்ட இரண்டு பாடங்களுக்குரிய நூல்களும் வழங்கப்படவில்லை.

இதேவேளை—

உரிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கூட புதிய பாடத்திட்ட நூல்களை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயங்கள் தொடர்பாக மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையைச் சேர்ந்தஅதிகாரியிடம் கேட்டபொழுது யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களுக்கு எனத் தனித்தனியாகப் பொதி செய்யப்பட்டு குறியீட்டுடன் வந்து சேர்ந்த பொதிகள் பிரிக்கப்படாமல் உரிய வலயங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட கல்வி வலயங்களின் நிலைமையை கருத்திற் கொண்டு விரைவில் வரவுள்ள ஏனைய பாடநூல் பொதிகள் அனைத்தும் பிரிக்கப்பட்டு தேவையின் அடிப்படையில் அந்தந்தக் கல்வி வலயங்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (ம—10—86)

# சீருடை விநியோகம்

பருத்தித்துறை, ஜன. 18

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கெற்பெலி அ. த. க. பாடசாலை மாணவர்கள் தமது இலவசசீருடை, இலவச பாடநூல்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு தற்போது வடமராட்சியில் புலோலி மெ. மி. த. க. வித்தியாலயத்தில் இயங்கும் காலைநேர பாடசாலை அதிபர் திருமதி க யோகநாதனிடம் பதிவுகளைச் செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [ம-118]


**களவாடப்பட்டது**

அல்லியாவத்தை கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியைச் சேர்ந்த

சின்னவன் தர்மராசா என்பவரது

**MD90E சிவப்புநிற Honda மோட்டார்சைக்கிள்**

(இல.503-5677, இன்ஜின் இல.MD90E-2004287)

குலம் கிறீம் ஹவுசுக்கு முன்னால் நின்ற போது களவாடப்பட்டுவிட்டது.

தகவல் அறிந்தோர் மேலுள்ள விலாசத்துக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(83060)

# 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில்.....





பொலீஸ் - இராணுவக் கட்டுக்காவலுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு நிகழ்வில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்கள்



'பொங்கு தமிழ்' நிகழ்வில் துணைவேந்தர் உரையாற்றுகிறார்.



வாயைக் கறுப்புத் துணியால் கட்டிக்கொண்டு நின்ற பல்கலைக் கழக மாணவர்கள்.

## சுலோக அட்டைகளில் காணப்பட்ட வாசகங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ்பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வின் போது பல்கலைக்கழக மைதானத்தைச் சூழ கட்டப்பட்டிருந்த பதாகைகளில் காணப்பட்ட வாசகங்கள் வருமாறு:-

"அரசே உடனடியாக யுத்தத்தை நிறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசு!"

"தமிழர்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே"

"தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை மரபுவழித் தாயகமே"

"அரசே பயங்கரவாதத்தை நிறுத்து"

இந்த வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளையும் மாணவர்கள் தாங்கியிருந்தனர். (ம-5)

## தென்னை, பனை வள கூ.சங்கங்களின் கிளைக் குழுத் தேர்தல்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள்

அரியாலை,ஜன.18

யாழ்மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தேர்தல் மூலம் தெரிவுசெய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டு வருவதாக திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்பாக மேற்படி சங்கங்களின் கிளைக் குழுக்களுக்கான தேர்தலை நடத்தி கிளைக்குழுக்களைத் தெரிவு செய்து பின்னர் பொதுச்சபையைக் கூட்டிப் புதிய நிர் வாகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஐ-17)

## கந்தரோடைப் பகுதியில் திருட்டுகள் அதிகரிப்பு

கந்தரோடைக் கிராமத்தில் அண்மைக் காலமாக இரவு நேரத் திருட்டுகள் அதிகரித்துள்ளன.

இப்பகுதியில் உள்ள பலசரக்குக் கடையொன்று கடந்த இரவு உடைக்கப்பட்டு பல ஆயிரக் கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. தருமராசா என்பவருக்குச் சொந்தமான கடையே உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டன.

இத் திருட்டுசம்பந்தமாக சுன்னாகம் பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இக் கடைக்கு அருகில் அமைந்துள்ள கந்தரோடை உப தபால் கந்தோரிலும் அண்மையில் கதவுகள் உடைக்கப்பட்டுப் பணம், பெறுமதி வாய்ந்த முத்திரைகள் என்பன திருட்டுப்போயுள்ளன. (ஐ-152)



'எழுச்சி நிகழ்வு நடைபெற்ற பல்கலைக்கழக மைதானம் அலங்கரிக்கப்பட்டிருந்த காட்சி.

## சுமார் ஏழாயிரம் பொலீஸாருக்கு அடிப்படைக் கல்வி அறிவு இல்லையாம்!

### கருத்துக் கணிப்பு மூலம் தகவல்

கொழும்பு,ஜன.18

நாட்டிலுள்ள பொலீஸ் நிலையங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களில் சுமார் 7 ஆயிரம் பேர் அடிப்படைக் கல்வித் தகைமைகளைக் கூடப் பூர்த்தி செய்யாதவர்கள் என்பது கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளதாக 'சிலுமின' என்ற சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

பொலீஸார் பலருக்கு அடிப்படைக் கல்வி அறிவு இல்லாததால் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதில் பல சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள், சாட்சிகள் போன்றோரின் வாக்குமூலங்களைப் பொலீஸார் சரியான முறையில் பதிவு செய்யத் தவறுவதால் மரண விசாரணைகள், வழக்கு விசாரணைகளை முன்னெடுப்பதிலும் பல சிக்கல்கள் தோன்றி உள்ளதாகவும் 'சிலுமின' செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ஐ-20)

# மலையகத்தில் அமைக்கப்பட்ட படை முகாம்கள் அகற்றப்படும்

## ஜனாதிபதியுடனான சந்திப்பில் இணக்கம்

கொழும்பு,ஜன.18

பிந்துனுவெவ சம்பவத்தைத் தொடர்ந்து மலையகத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மேலதிக இராணுவத்தை அகற்ற ஜனாதிபதி இணங்கியுள்ளதாக தோட்ட உட்கட்டமைப்பு கால்நடை அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் வைத்து கடந்த செவ்வாய் மாலை ஜனாதிபதி ...ன் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது இது குறித்து ஜனாதிபதி இணங்கியுள்ளார். மலையக மக்களுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகள் குறித்து இங்கு ஆராயப்பட்டுள்ளது.

ஹற்றன் உட்பட மலையகத்தில் அமைக்கப்பட்டுள்ள மேலதிக இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்ற தனது கோரிக்கைக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததாக அமைச்சர் தொண்டமான் கூறினார். இந்த முகாம்களினால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கஷ்டங்கள் குறித்து அவர் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

மலையக மக்களுக்கான வீட்டுத திட்டத்தை துரிதப்படுத்த ஜனாதிபதி இணங்கியதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 400 ரூபா சம்பள உயர்வு வழங்குவது பற்றியும் நான் ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறினேன். இது குறித்து இன்னும் 10 தினங்களில் மாநாடு நடத்தி முடிவு செய்ய ஜனாதிபதி சம்மதித்தார். இந்த உயர் மட்ட மாநாட்டில் பிரதமர் நிதி அமைச்சின் செயலாளர் போன்றோரும் கலந்து கொள்ள உள்ளனர் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# 5 ஆயிரம் ப...ாளிகளுக்கு வீட்டுத் தோ...ட உதவி

## ...பட்டினிக்கு எதி...ான நிறுவனத்தால்

யாழ்ப்பாணம்,ஜன18

பட்டினிக்கு எதிரான நிறுவனத் ...னால் யாழ்.மாவட்டத்தில் 5 ஆயி... பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்... செய்கைக்கான உதவிகள் ...கப்படவுள்ளன.

...காப்பாய், நல்லூர் ,சங்கானை, ...பிட்பாய், உடுவில், தெல்லிப் ...ய பிரதேச செயலர் பிரி... ...ங்கியுள்ள இடம் பெயர்ந் ...கு இத்திட்டத்தில் முன் ... வழங்கப்படவுள்ளது.

...வர்களில் இடவசதி, நீர்ப் ... வசதியுடைய விவசாயிகள் ... செய்யப்பட்டு மரக்கறி ...கள் மற்றும் விவசாய உபகர...ங்கள் வழங்கப்படவுள்ளன.

வீட்டுத்தோட்ட செய்கைக்கு தேவையான பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை -

இந்த நிறுவனத்தினால் நீர் சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 5 குளங்களும் 80 கிணறுகளும் 50 நிரந்தர மலசல கூடங்களும் திருத்தி அமைக்கப்படும் என்று நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

இடம்பெயர்ந்தோர் மற்றும் பொதுமக்களின் பாவனையிலுள்ள 100 தற்காலிக மலசல கூடங்களும் இத்திட்டத்தின் கீழ் திருத்தி அமைக்கப்படவுள்ளன. (ஐ-5)

# மிருசுவில் படுகொலைச் சம்பவம்: ஆணைக் குழு அறிக்கை அனுப்பியது

யாழ்ப்பாணம்,ஜன.18

மிருசுவில் பகுதியில் வீடு பார்க்கச் சென்ற எட்டுப் பொதுமக்கள் படையினரால் படு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்திற்கு குழுவின் யாழ். அலுவலகத்தினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி சட்டத்தரணி என்.ஜீவேஸ்வரா இந்த அறிக்கையை அனுப்பி வைத்துள்ளார். (ஐ-5)

# துருசுக்கம்பிகள் திருடப்பட்டன

சண்டிலிப்பாய்,ஜன.18

சங்கானை தெற்கு இந்து மயானத்திற்கு அண்மையில் உள்ள வழுக்கை ஆற்றுப் படுக்கையிலுள்ள குளத்தில் நீர்ப்பாசன திணைக்களத்தினால் அமைக்கப்பட்ட அணையின் துருசிலுள்ள இரும்புக்கம்பிகள் திருடப்பட்டுள்ளன.

இரும்பு அறுக்கும் வாளினால் அறுத்தே இக்கம்பிகளை திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர். இத்திருட்டுச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் விவசாய சம்மேளனத்தினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-135)

# குருநகர் ஆலய வருடாந்தத் திருவிழா

குருநகர் புனித செபஸ்திய ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 11 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தினமும் மாலை செபமாலை வழிபாடுகள் இடம் பெறுகின்றன.

இந்த ஆலயப்பங்கின் மக்கள் மீளவும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி உள்ளதால் ஆலயத்தின் திருவிழா ஆராதனைகள் இன்றும் நாளையும் முழு அளவில் நடைபெற உள்ளன. நாளை மாலை 5.00 மணிக்கு திவ்விய நற்கருணை ஆராதனையும், மறுநாள் சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (ஐ-51)

# தாயும் மகனும் தீக்காயம்

யாழ்ப்பாணம்,ஜன.18

'ரின்னர்' ஊற்றிகலக்கி வைத்த பெயின்ற் ரின்னை, குப்பி விளக்குடன் சென்று, திறந்து பார்த்த போது திடீரென அது தீப்பற்றி எரிந்ததில் இருவர் எரிகாயங்களுக்குள்ளாயினர்.

மாதகலில் கடந்த திங்கள் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஸ்ரீனிவாசன் சரோஜாதேவி (வயது46) அவரது மகன் ஸ்ரீனிவாசன் மதனரூபன் (வயது14) ஆகிய இருவருமே எரிகாயத் திற்குள்ளாயினர்.

மதனரூபன் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். தாயாரான சரோஜாதேவி படுகாயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

# அல்லைப்பிட்டி மக்களுக்கு பஸ் வசதி இல்லை

வேலணை,ஜன.18

அல்லைப்பிட்டி பகுதிக்கு பஸ் சேவை இல்லாமையினால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அப்பகுதி மக்கள் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, குறிகட்டுவான் ஆகிய பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமாயின் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் கால்நடையாக நடந்து வந்தே பஸ்ஸில் பயணம் செய்கின்றனர். (ஐ167)

# மரண அறிவித்தல்கள்

## நீக்கிலாப்பிள்ளை மனுவேற்பிள்ளை

சில்லாலையை வசிப்பிடமாகக் கொண்ட நீக்கிலாப்பிள்ளை மனுவேற்பிள்ளை நேற்று (17-01-2001) புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ் சென்ற அந்தோனியாப்பிள்ளையின் அன்புக் கணவரும், சூசைப் பிள்ளை, செபஸ்ரியாம்பிள்ளை, மரியாம்பிள்ளை, காலஞ்சென்ற அந்தோனிப் பிள்ளை, காலஞ்சென்ற எலிசபேத் ஆராக்கியம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18-01-2001) வியாழக் கிழமை பி.ப 3.00 மணியளவில் சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு, கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

*சில்லாலை,*
*பண்டத்தரிப்பு.*

தகவல்:
ச.அந்தோனிப்பிள்ளை குடும்பத்தினர்
(மைத்துனர்)

(83047)

## திருமதி சுசீலா முருகதாஸ்

ஏழாலை தெற்கு விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டன் நியூமோல்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுசீலா முருகதாஸ் 13-01-2001 சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முருகதாஸின் ஆருயிர் மனைவியும், வே.சின்னையா (இளைப்பாறிய அதிபர்) - திருமதி சிவசோதி சின்னையா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் - திருமதி பாக்கியம் சுப்பிரமணியம் ஆகியோரின் அருமை மருமகளும், மைதிலி, ஹரிஹரன், குறிஞ்சிக்குமரன், காயத்திரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி.சுவர்ணா தனபாலசிங்கம் (லண்டன்), திருமதி சாந்தினி யேசுதாஸ் (லண்டன்), சோமாஸ்கந்தா (லண்டன்), திருமதி சியாமளா ரவிவர்மன் (கனடா), திருமதி சுமித்திரா பிரேம்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு அக்காவும், திருமதி இன்பமலர் சபாரத்தினம் (கனடா), திருமதி செல்வமலர் சித்தி விநாயகப்பிரகாசம் (கொக்குவில்), திருமதி அரியமலர் ஜெயனொளிபவன் (கொக்குவில்), திருமதி இந்திரயோதி சிவபாலசுந்தரம் (லண்டன்), தனபாலசுந்தரம் யேசுதாஸ், ரவிவர்மன், திருமதி வாசுகி சோமாஸ்கந்தா, பிரேம்குமார் ஆகியோரின் அருமை மைத்துனியும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (ஏழாலை), கனடாவைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம், வைரவநாதன், சொக்கலிங்கம், திருநாவுக்கரசு, லண்டனைச் சேர்ந்த காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, திருமதி சிவானந்தசோதி ரகுநாதன், திருமதி ஞானசோதி சந்திரபாலா, சிவானந்தன், ஞானேஸ்வரன் ஆகியோரின் அருமை மருமகளும், ஜீவகலா, சிவராஜன், நிறைஞ்சலா, ஹம்சலா, ஜெயராஜன், சர்மளா, சுபாங்கினி, வினோதினி, பிரயாங்கினி,தபோதினி, ரவிராஜ், ரெஜனி, பிரதாபன், பிரசாந்தன், நிரோசாந்தன் ஆகியோரின் இணைபிரியா மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-01-2001 ஞாயிற்றுக்கிழமை லண்டன் நியூமோல்டனிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*மணியகிரி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
**முருகதாஸ்** (கணவர்)
தொலைபேசி:- 0044 208 9494899
திருமதி
பா.சுப்பிரமணியம்(மாமியார்)

(83027)

# 9 அடி உயர ஆஞ்சநேயர் விக்கிரகம் கப்பலில் யாழ்.வந்தது!

## மருதனார்மடத்தில் விரைவில் பிரதிஷ்டை

வலி.வடக்கு,ஜன.18

மருதனார்மடம் சந்தியில் அமைக்கப்பட்டுவரும் ஆஞ்சநேயர் ஆலயத்திற்கான ஆஞ்சநேயர் விக்கிரகம் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளது.

தற்போது பருத்தித்துறையில் தரித்து நின்று பொருள்கள் இறக்கும் கப்பலில் எடுத்துவரப்பட்ட விக்கிரகம் வெகு விரைவில் மருதனார் மடத்தில் அமைக்கப்பட்டு வரும் ஆலயததில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

9.அடி உயரமான இந்த ஆஞ்சநேயர் சிலை பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து ஊர்வலமாக மருதனார் மடத்தில் உள்ள ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

மேற்படி ஆலயத்தின் நிர்மாண வேலையில் பெரும்பகுதி வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன. (ஐ86)

# நல்லூர்த் தொகுதியில் ஈ.பி.டி.பி. வீடமைப்புத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.18

நல்லூர்த் தொகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வீடற்ற மக்களுக்கு விசேட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி. அமைப்பு விடுத்த ஓர் அறிக்கையில் இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டதின் கீழ் முதற்கட்டமாகப் பிரதேசத்தில் 50 வீடுகள் அமைதுக் கொடுப்பதற்கு வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வீட்டுத்திட்டம் அமையவுள்ள கோண்டாவில் கிழக்கு சென்செபஸ்தியார் வீதி, இணுவில் காரைக்கால பகுதி, கோண்டாவில் மேற்கு குட்செற் வீதி, திருநெல்வேலி பாற்பண்ணை வீதி, கொக்குவில் மேற்கு பூநாறி மரத்தடி மற்றும் தேங்காய் மூலை ஆகிய இடங்களுக்கு நல்லூர் பிரதேச சபைத் தலைவருடன் நல்லூர் பிரதேச சபை உபதலைவர் துரை.தவராசா, வீடமைப்பு அதிகாரசபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் மாசிலா மணி, மற்றும் பிரதேச சபைத் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கொண்ட குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

இவ்வீடமைப்புத் திட்டத்தின் கீழ், வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபை விரைவில் 25ஆயிரம் ரூபாவும் வடபகுதி அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழர் விவகார அமைச்சினால் 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. அரச ஊழியர்களுக்கு இச்சலுகைகள் வழங்கப்படமாட்டாது எனவும் குறைந்த வட்டியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் 20 ஆயிரம் ரூபா கடனுதவி மட்டும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சொந்தமாகக் காணியுள்ளவர்களுக்கு இவ்வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. குத்தகைக் காணியில் வாழ்ந்துவருவோர் காணிச் சொந்தக்காரரது அனுமதி பெற்றுக்கொள்ளும் போது, அவர்களுக்கும் இவ்வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகளைப் பெற்றுக்கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - வீட்டுக் கூரைகள் சேதமடைந்தவர்களுக்கு 32 ஆயிரம் கூரைத் தகடுகள் வழங்கப்படவுள்ள தாகவும் தெரியவந்துள்ளது - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சுழிபுரம் பகுதியில் நான்கு ஆலயங்களில் பாலஸ்தாபனம்

சுழிபுரம்,ஜன்.18

வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேசத்திலுள்ள பிரதான நான்கு ஆலயங்கள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம், சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம், சுழிபுரம் வடக்கு புராதன சிவன் ஆலயம், பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் மகாலட்சுமி ஆலயம் ஆகியவற்றில் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் வழக்கம்பரை அம்பாள் இராச கோபுரம் பூர்த்தியாகவுள்ளது. இதனைத் தொடர்ந்து ஆலய பாலஸ்தாபனம் நடைபெற்று உடன் கும்பாபிஷேகம் நிகழவுள்ளது.

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய கும்பாபிஷேக கருமங்களை கவனிக்க ஒரு சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. முதலில் ஊரிலும் வெளிநாட்டிலும் நிதி சேகரிப்பு நடைபெற்று பின்னர் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் பாலஸ்தாபனம் நடைபெற்று கும்பாபிஷேகம் நடத்தவுள்ளனர். (ஐ-28)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
24 - 07 - 1924



மறைவு
19 - 12 - 2000

**அமரர் முருகேசு சுப்பையா**
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

எமை அன்புடன் வளர்த்தெடுத்து
எமது உயர்விற்காய் உழைத்திருந்து
எம் பாதுகாப்பிற்காய் வாழ்ந்திருந்து ஈற்றில்
எமைவிட்டு ஸ்ரீமந் நாராயணன் அடி சேர்ந்த
எங்கள் ஐயாவை வணங்குகின்றோம்.

**இன்று (18.01.2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*மூளாய் மேற்கு,*
*சுழிபுரம்.*

-குடும்பத்தினர்

(82970)

# தமிழ் - சைவ ஆய்வுக்கான ஒரு நிறுவனம் துர்க்காபுரத்தில் அமைக்கப்பட வேண்டும்

## பிறந்தநாள் அறக்கொடை நிதிய விழாவில் வலியுறுத்து

*தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தான தலைவி 'துர்க்கா துரந்தரி' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 76 ஆவது பிறந்தநாள் அறக்கொடை நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. அந்த நிகழ்வு பற்றிய தொகுப்பு இது.*

"இவ்வாலயத்தில் பல அறப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வறப்பணிகளில் இன்னும் சில செய்யப்படவேண்டி உள்ளது. இந்த ஆண்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் அமைக்கப்பட்டு வரும் நூலகம் விரைவில் கட்டி முடிக்கப்படும். அதற்குத் தேவையான பல பெறுமதியான நூல்கள் வர இருக்கின்றன. அறப்பணிகளுள் மற்றொன்றாக கல்விப் பணியும் செய்யலாம். இந்தியாவில் வெங்கடாசலபதி, திருவெங்கடத்திலே ஸ்ரீ சத்திய சாயி பாபாவுடைய புட்டபர்த்தியிலே உள்ள பல கல்லூரிகளிலே பல கல்வி நிறுவனங்கள் அமைத்துள்ளார்கள். அங்கெல்லாம் பல்கலைக் கழகத்திலே இடமில்லை என்று அல்ல; ஆனால் இங்கு பலர் படிக்க விரும்பிச் செல்கின்றனர். ஏனென்றால அது ஒரு தனித்துவமான சிறப்பான கல்விப் பணியைச் செய்கின்ற நிறுவனமாகும். இத்தகைய ஓர் ஆய்வு நிறுவனம் - தமிழ் - சைவம் - ஆய்வுகளுக்கேற்ற ஓர் ஆய்வு நிறுவனம் துர்க்காபுரத்திலே அமைக்கப்பட வேண்டும். அது காலகதியில் ஒரு பல்கலைக்கழகமாக மாறலாம்."

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 76 ஆவது பிறந்தநாள் அறக்கொடை நிகழ்வுக்கு தலைமை வகித்து உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் இந்நிகழ்வு இடம் பெற்றது. காலை, மாலை என்று இரு நிகழ்வுகளாக அவை அமைந்திருந்தன.

காலை நிகழ்வுகளுக்கு தலைமை வகித்த பேராசிரியர் அ.சண்முகதாஸ் மேலும் கூறியதாவது:-

இங்குள்ள இளைஞர்களின் துடிப்பு, ஆர்வம், முயற்சி போன்று வேறு எங்கும் அமையவில்லை; காணமுடியாது. ஒழுக்கம், பணிவு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்டவர்களாக, இங்கு நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பக்கபலமாக இருந்து வருகின்றனர். இளைஞர்களும் தொண்டர்களும் வயது, பால் வேறுபாடின்றி அம்மாவுக்குப் பக்க பலமாக இருந்து வருகின்றனர். இந்த ஆலயத்தின் சிறப்புக்கு இது ஒரு காரணமாக அமைகின்றது - என்றார்.

ஆசிரியர் ஆறு.திருமுருகனின் வரவேற்புரையைத் தொடர்ந்து மகாராஜஸ்ரீ கு.து.சண்முகநாதக்குருக்கள், ஆலயக் குரக்கள் சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசசார்ய சுவாமிகள் ஆகியோர் ஆசி உரைகள் வழங்கினர்.

### ஆதீன முதல்வர்

இவ் விழாவுக்கு அறம், தமிழ், சமயம், தொண்டு என்கின்ற முத்திரைகள் பதிக்கப்படுகின்றன. மக்கள் இப்படித்தான் வாழவேண்டும் என்பதை அம்மா அவர்கள் வாழ்ந்து காட்டி வருகின்றார்கள். அவரின் வாழ்வுக் காலத்தில் நாம் வாழ்வது சிறப்பைத் தருகின்றது. தன் பணியை புனிதமாக வழங்கி இந்தமண், மக்கள், சமயம், மொழி ஆகியவற்றுக்குப் பெருமை சேர்த்து எம்மைத் தலைநிமிர்ந்து வாழ வைத்துள்ளார். அறத்துக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றார். எமது இனத்தின் விடிவிளக்காக அவர் திகழ்ந்து பல்லாண்டுகாலம் வாழ்ந்து, அறம் வேரூன்ற தர்மம் தலை தூக்க அம்மா நீடூழிகாலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கவேண்டும் - என ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தமது ஆசியுரையின்போது குறிப்பிட்டார்.

மருதனார்மடம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் வாழ்த்துரை வழங்கிய போது பின்வருமாறு கூறினார்.

### அன்னை பராசக்தி போன்ற அவதாரம் எங்கள் அம்மா

மரணம் நாளுக்கு நாள் எம்மை அச்சுறுத்திக்கொண்டே இருக்கின்றது. மரணம் உள்ளவரை எமது இதயத்தில் வலிமையின்மை இருந்து கொண்டேயிருக்கும். வலிமையின்மை இருக்கும்வரை நம் மத்தியில் அழுகுரல் தொடர்ந்த வண்ணமே இருக்கும். எல்லா வீடுகளிலும் இன்று அழுகுரலைக் கேட்கின்றோம். இந்த நிலையில் நாம் ஆண்டவனில் நம்பிக்கை கொண்டவர்களாகவே இருக்க வேண்டும். எமக்கு முன் தோன்றி எமக்கு ஆறுதல் கூறக்கூடிய பெறுமதி வாய்ந்தவர்கள் நம்மிடையே இல்லை. இதுதான் இன்றுள்ள பிரச்சினை. இதற்கான தீர்வு இந்த ஆலயத்திலே இருக்கின்றது. எமது துன்பத்துக்கு இறைவன் பதில் சொல்லவில்லையே என நினைத்துக்கொண்டு அம்மாவிடம் வருபவர்களுக்கு அங்கே விடை - தீர்வு - கிடைக்கிறது. இதனையே நாம் அவதாரம் என்கிறோம். அந்த பராசக்தியினுடைய தோற்றத்தை அம்மாவிடம் நாம் காணமுடிகிறது.

### அருள் பொங்கும் விழியிலே 'ஓம்'

அம்மாவுடைய அருள் பொங்கும் விழியிலே 'ஓம்' என்ற வார்த்தையே இருக்கும். தம்மை நாடி வருபவர்களிடம் அவர் 'இல்லை' என்ற சொல்லை பயன்படுத்துவதே இல்லை.

### அம்மா ஒரு ஞானபானு

ஞானம் என்ற அறிவு வந்து சேர்ந்தால் ஏனைய விடயங்கள் தாமாகவே எம்மை வந்தடையும். எமது பிரதேச குழந்தைகள் ஞானம் பெற வேண்டும் என்ற நோக்கோடு அவர் பல அறக்கொடைகளைச் செய்கின்றார். கீர்த்தி, தீரம், நல்லறிவு, வீரம் என்பவை எம் மனதில் சேரவேண்டும் என்பதற்காக வந்து உதித்துள்ள 'ஞானபானு'வாக அம்மா விளங்குகின்றார்.

### கல்வித் தரத்தை உயர்த்தும் கருவி

யாழ்குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த வருமானமுள்ள பெற்றோரைக் கொண்டுள்ள 18 வீதமான பிள்ளைகள் உள்ளனர். நல்ல முறையில் இவர்கள் கல்விபெற இந்த வருமானம் போதாது. 6.5 வீதமான பிள்ளைகளின் பெற்றோர்கள் எந்த வேலையும் இன்றி உள்ளனர். 1996 ஆம் ஆண்டுத் தகவலின்படி ஒரு வீதமான பிள்ளைகள் தொடர்ந்து அகதிமுகாம்களில் வாழ்கின்றனர். 1.9 வீதமான பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதில்லை. 20 வீதமான பிள்ளைகள் பாடசாலையை விட்டு இடைவிலகி உள்ளனர். இவை எல்லாம் இன்று இன்னும் அதிகரித்திருக்கும்.

**தொகுப்பு: வலி.தெற்கு செய்தியாளர்**

இலங்கையிலேயே முதலாம் தரத்தில் சேரும் மாணவர் எண்ணிக்கை வரவர குறைந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் தான் உலக வங்கி எமக்கு ஆசிரியத் தேவை இல்லை என்கிறது. 64.3 வீதமான பிள்ளைகளுக்கு படிப்பதற்கான தளபாடங்கள் இல்லை. 1.8 வீதமான பிள்ளைகள் பெற்றோரை இழந்து அல்லது பிரிந்து வாழ்கின்றனர். இவை எல்லாம் அம்மாவின் கவனத்தில் இருந்து சில பிள்ளைகளைத் தம்முடன் வைத்து அறிவு புகட்டி வருகிறார். கல்வித் தரத்தை உயர்த்திவிடும் ஒரு பெரிய கருவியாகத் திகழ்கிறார்.

### பராசக்தியின் வடிவம் அம்மா

"புல்லிலே வயிரப்படை தோன்றுங்கால் பூதலத்தில் பராசக்தி தோன்றுமே" எனப் பாரதியார் கூறுகிறார். புல் ஒரு மெல்லிய பூண்டு. அதில் வயிரம் தோன்றாது. ஆல்மரம், பலாமரம் போன்று புல்லுக்கு வயிரம் இல்லை. அதேபோல பராசக்தி தோன்றுவதும் அருமை. இன்று நம் மத்தியில் அதுதான் நிகழ்ந்திருக்கின்றது. இந்தப் புல்லுகள் எல்லாம் வைரப் படையைத் தாங்கிநிற்கின்றன. வயிரம வெட்டக்கூடியது. இந்தப் போர் ஒரு பெரிய வயிரப் படையாகக் கலந்து புற்களை எல்லாம் தின்று அரித்துக் கொண்டிருக்கின்றது.

இந்த நேரத்திலே தோன்றாது தோன்ற முடியாது தோன்றுவது - அருமை என எண்ணிக்கொண்டிருந்த நம் மத்தியில் பராசக்தி தோன்றியுள்ளார். 'புல்லினில் வயிரப்படை தோன்றுங்கால் பூதலத்தில் பராசக்தி தோன்றுமே' என்ற பாரதியின் வாக்குக்கு வலிமை சேர்த்து எமது அம்மையார் எங்கள் மத்தியில் பராசக்தியின் உருவமாகத் தாயாகத் தோன்றியுள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியமும் வாழ்த்துரை வழங்கினார். ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியினால் எழுதப்பட்ட 'பெண்மைக்கு இணையுண்டோ?' என்ற நூலை வெளியிட்டு வைத்து ஆய்வுரை நிகழ்த்தினார்.

கண் சத்திர சிகிச்சை செய்து வில்லையின் குளிசைகள் பெறமுடியாத நலிவுற்ற மக்களுக்கு சுன்னாகம், இணுவில், மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினரால் வழங்கப்பட உள்ள உதவிக்கென அறக்கொடை நிதியத்தில் இருந்து ரூபா 30 ஆயிரம் வழங்கப்பட்டது. லயன்ஸ் கழகத்தினர் கண் பார்வை குறைவுடைய பாடசாலைப் பிள்ளைகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கினர். மாலை நிகழ்ச்சிகள் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றன. இதன்போது வலிகாமம், யாழ்ப்பாணம் கல்வி வலயங்களிலிருந்து ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்பில் பயிலும் 150 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வாங்குவதற்கென ஒருவருக்கு 300 ரூபா வீதம் 45 ஆயிரம் ரூபா அறக்கொடை நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நீண்ட உரையாற்றினார். அவரது உரை இங்கு தொகுப்பாகத் தரப்படுகிறது:-

வாழ்நாளிலே பிறந்த நாளை மகிழ்ச்சி உள்ள நாளாகவும், தெய்வ வழிபாட்டுக்கு வழிகாட்டுகின்ற நாளாகவும் மற்றவர்களுக்கு அறக்கொடை வழங்கும் நாளாகவும், ஆரம்பிப்பதற்கு இன்றைய நாள் போன்ற நாள்கள் எம்மை நெறிப்படுத்துகின்றன.

இந்த வகையில் 76 ஆண்டை நிறைவுசெய்த எனக்கு இன்று மேலும் பல சிறப்புக்களை அன்பர்கள் செய்துள்ளனர். பாராட்டுக்கள், ஆசியுரைகள், அந்தணர்களின் ஆசீர்வாதங்கள், அதிபர்கள், மாணவர்களின் பாராட்டுக்கள் என்னை மேலும் மேலும் இப்பணியைச் செய்ய ஊக்குவிக்கின்றன.

ஆண்டுதோறும் எனது பிறந்த நாளில் இப்படியான ஒரு நிகழ்வு கடந்த 10 ஆண்டுகளாக சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றது. பத்து ஆண்டுகளாக அறநிதிய உதவு தொகையில் இருந்து பலதிறப்பட்ட நன்கொடைகள் வழங்கிவருகின்ற ஒருசிறப்பு எமது தேவஸ்தானத்திற்கு உண்டு. இவ்வறக் கொடை வைபவத்தை நல்லபடி நிகழ்த்த ஒரு சபை இருக்கின்றது. அது பலருடைய ஆலோசனைகளைப் பெற்று அறக்கொடையை எவ்வாறு நிகழ்த்துவது என முடிவுசெய்கின்றது. இவ் வருடம் அறக்கொடைக்கு வரும் வட்டி மிக அதிகமாக வந்துள்ளது.

சென்ற ஆண்டிலே எனது பவள விழாவின் மூலம் கிடைத்த அன்பளிப்பு, ஒரு தொகையாக எமக்கு வந்து சேர்ந்தது. அதற்கு முதல் ஆண்டில் அறக்கொடை நிதியத்தில் ஆறு லட்சம் ரூபா இருந்தது. சென்ற ஆண்டு சேர்ந்த தொகையோடு இன்று அது 11 இலட்சம் ரூபாவாக சேர்ந்து தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இப்பணத்துக்கான வட்டி சுமார் ஒரு லட்சம் ரூபாவரை கிடைக்கின்றது. இதைக்கொண்டுதான் ஆண்டுதோறும் இப்படியான புண்ணிய காரியங்கள் நடத்தி வருகிறோம். ஏழை மாணவர்கள் எங்கள் சிந்தனைக்குரியவர்கள். அவர்கள் கல்வியில் முன்னேற வேண்டும். எங்கள் அயலிலே எத்தனையோ மாணவர்கள் நன்றாகக் கல்வி கற்கின்றார்கள். ஆனால் கல்வி கற்பதற்குரிய வாய்ப்புக்கள் அவர்களுக்கு இல்லை. பணவசதி மிகக் குறைவு. பாடப் புத்தகங்கள் வாங்க அவர்களுக்கு பணவசதி குறைவாக இருக்கின்றது என்பதை நான் நன்கு அறிவேன். அவர்கள் அடிக்கடி எமை நாடி வந்து கேட்கிற போதெல்லாம் கொடுத்து உதவிவருகிறோம்.

பிறந்த நாள் அறக்கொடையில் மட்டுமல்ல; இடையிடையே அறக்கொடை வழங்கப்படுகிறது என்று சொன்னால் அது ஆலயத்தின் அறக்கொடையில் இருந்து அவர்களுக்குச் சென்றடைகின்றது.

சென்ற ஆண்டு சுமார் 52 பாடசாலைகளுக்கு பரிசளிப்பு விழாவிற்கென தொகை வழங்கியுள்ளோம். எமது ஆலயத்தில் இப்படியான காரியங்களுக்கும் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கு மட்டுமல்ல, வசதியற்ற ஆலயங்களின திருப்பணிகள், சிறப்பாக நடைபெற எம்மால் இயன்ற உதவு தொகைகளை ஆலய நிதியில் இருந்து வழங்கி வருகிறோம். இந்த வருடம் நான்கு ஆலயங்களின் புனருத்தாரணங்களுக்கென நிதி வழங்கி உள்ளோம். அந்தணப் பெருமக்களுக்கு கொடுத்திருக்கிறோம். மாணவர்களின் எண்ணிக்கை [illegible] பாடசாலைகள் பலவற்றுக் [illegible] 5,000, 3,000 ரூபா [illegible] உள்ளோம்.

அம்பாளின் கருணை [illegible] பணத்திற்குக் குறைவில் [illegible] யமாக இச்சிறிய ஆலய [illegible] கிறது. கட்டடத்தினால் [illegible] யமல்ல. ஆனால் கை [illegible] பெரிய ஆலயம், மற்றவ [illegible] வைக்கின்ற அந்தப் [illegible] பணியினால் இந்த நாட்டி [illegible] பெற்ற ஓர் ஆலயம்.

இன்றைய எனது 76 ஆ[illegible] பிறந்தநாளிலே 150 மாணவர்களு[illegible] குப் பாடசாலை உபகரணங்களை வாங்கவென பாடசாலை தொடக்கக் காலத்திலேயே பெற்றுக்கொள்ள வசதியாக 45 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளோம். இது 150 பிள்ளைகளுக்கும் தலா 300 ரூபா வீதம் வழங்கப்படுகின்றது. சென்ற ஆண்டு உபகரணங்களை வாங்கிக் கொடுத்தோம். இந்த ஆண்டு பணமாக வழங்கி அவர்கள் விரும்பிய கல்வி உபகரணங்களை பெற்றுக் கொள்ளட்டும் என்ற நிலையில் பணமாக இப்பொழுது கொடுத்துள்ளோம்.

இத்தகைய அறக்கொடைகள் எமது நாட்டிலே உள்ள எல்லா ஆலயங்களிலும் நடைபெற வேண்டும். ஆலயத்தை எப்படி நடத்துகிறார்களோ எந்த வகையில் ஆலயப் பணிகள் மக்கள் மனதில் இடம்பெற்றிருக்கிறதோ அதற்குத் தக்கபடி பணமும் நல்லபடி வந்துசேரும். இதுதான எமது ஆலயத்தில் நாம் பணம் பெறுவதற்கான வாய்ப்பு.

### அறப்பண்பு தான் நம்மை வாழவைக்கிறது

பணத்தை நல்லபடி செலவு செய்ய வாய்ப்பாக இன்றைக்கு இருப்பது தர்ம கைங்கரியங்களே. தர்மத்தை நாங்கள் நேசிக்க வேண்டும். அறம் செய்ய விரும்பும் பண்பு தான் எங்களை வாழவைக்கின்றது.

பண்டைக்காலம் தருமகாரியங்களிலே ஈடுபட்ட ஒருகாலமாக இருந்தது. இடைக்காலத்திலும் எந்த ஒரு குறையும் இல்லை. இந்தக் காலத்திலும் குறை இருக்கப்போவதில்லை.

உலகத்துக்குள்ளே நாம் மயங்கக்கூடாது; நாம் செய்ய வேண்டிய பணிகளை வேகமாகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் 60 ஆண்டுகளின் பின் ஏற்பட வேண்டும். மரணம் தான் எங்களுக்கு நித்திய ஆறுதல். அதை நினைக்கிற போது தான் நல்லன செய்யவேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். இதனையே நான் எழுதியுள்ள புத்தகத்திலும் குறிப்பிட்டுள்ளேன்.

இன்றைய நூலை வெளியிட உதவிய இணுவில் பரமசாமி, எமது பிள்ளைகளான செல்விகள் தவனேஸ்வரி, மஞ்சுளா ஆகியோருக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் நிதி உதவி வழங்க உதவிய திருமதி கோகிலா மகேந்திரனுக்கும் நன்றி கூறவேண்டும்.

வெள்ளி, செவ்வாய்க்கிழமைகள், பிறந்தநாள், இறந்தநாள், திருமணம் என்று பல நிகழ்வுகளுக்கு எமது ஆலயத்தில் அன்னதானம் இடம்பெற்று வருகின்றது. அன்னதானத்தில் மகிழ்ச்சி அடையும் எமது ஆலயம் எத்தனையோ ஏழைகளின் வயிற்றுப் பசியைப் போக்கிவருகின்றது.

எமது நாட்டில் உள்ள ஆலயங்கள் தர்மப் பணியில் ஈடுபடவேண்டும். தருமகாரியங்களை தலையாய காரியமாக மதிக்க வேண்டும். பெருமக்களின் ஆலோசனைகளைக் கேட்டு, ஆலய நடைமுறைகளை நல்லபடி அமைத்துக்கொள்ள வேண்டும் - என்று அன்னை தெரிவித்தார்.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. ★

---

# புலமைப் பரிசில் விடைத்தாள்களை மீளாய்வு செய்யும் வசதி அவசியம்

## சிறுவர் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன,18

தரம் ஐந்துக்கான புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள்களை மீளாய்வு செய்யும் வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்கும்படி கல்விப் பணிப்பாளர் நாயகத்திடம் சிறுவருக்கான அபிவிருத்தி நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அமைப்பு பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐ.நாவின் செயற்திட்டத்தில் அதிக முக்கியத்துவம் சிறுவரின் உரிமைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி தரம் 5 மாணவர்களின் உரிமைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஜி.சீ.ஈ. சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சைகளை கல்வித் திணைக்களம் நடத்திவருகிறது.

அந்தப் பரீட்சைகளில் விடைத் தாள்களை மறு மதிப்பீடு செய்ய உள்ள வாய்ப்புகள் தரம் 5 இற்கான புலமைப் பரிசில் பரீட்சையின் போது வழங்கப்படுவதில்லை.

இதனால் ஆர்வமுள்ள மாணவர்கள் விடைத்தாள்களைத் திருத்தும் போது ஏற்படும் தவறுகளால், தன் நம்பிக்கை இழந்து, படிப்பைத் தொடரமுடியாது போகின்றது. வறிய மாணவர்களும் படிப்பைத் தொடராமல் பணவசதியின்மையால் இடைநிறுத்திக் கொள்கிறார்கள்.

கடந்த வருடம், மட்டக்களப்பிலும், இந்த வருடம் காரைநகரிலும், பாடசாலை அதிபர்களின் நேரடி முயற்சியால்,விடைத்தாள்கள் மறுமதிப்பீடு செய்யப்பட்டதன் மூலம் இரு மாணவர்களது மதிப்பெண்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவற்றை உதாரணங்களாகக் கொண்டு தரம் 5 இற்கான புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்ய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு சிறுவருக்கான அபிவிருத்தி நிலையம் கோரியுள்ளது.(ஐ-ஒ)

## ...சிறு விளம்பரம்

### ...புறொயிலர் ...ற்பனைக்கு

...செய்யப்பட்ட BAIRAHA ...யிலர் இறைச்சிக் கோழி ...SAUSAGES, CHICKEN MEAT ...LS எம்மிடம் பெற்றுக் கொள்ள ...ம். தொடர்பு: 145, நவீன சந்தை, ...ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ...T.P 2868. (82929)

கொழும்பிலிருந்து தினமும் இறக்குமதி செய்யப்படுகின்ற சுத்தம் செயயப்பட்ட வயீராபாம் புறொயிலர் இறைச்சி மற்றும் KEELS வகை சொசேஜஸ் என்பன குறைந்த விலையில் விற்பனையாகின்றன. இறைச்சி மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை-250/- மொத்தமாகக கொள்முதல செய்வோருக்கு சலுகை உண்டு. தொடர்பு: T.கரன், ஆஸ்பத்திரி வீதி, (கஸ்தூரியார் வீதிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (82980)

### மணமக்கள் தேவை

1974இல் பிறந்த இந்து மத சைவ போசன பட்டதாரி மணப்பெண்ணுக்கு சைவ போசனமுள்ள மணமகனும், 45 வயதுடைய 9000/- சம்பளம் பெறும் கிறிஸ்தவ அரசாங்க உத்தியோகத்தருக்கு 36 வயதுக்குட்பட்ட மணப்பெண்ணும்(ஆசிரியை விரும்பத்தக்கது) தேவை. தொடர்பு: சோமசுந்தரம், 122, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி. (82888)

### விற்பனைக்கு

SUPERCUP-70 (மக்னெற்மொடல் 500) மோட்டார் சைக்கிள் மற்றும் பழைய வயலின் முதலியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி. திருக்குமரன், (வீணாவேணு) வழக்கம்பரை வீதி, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். (82866)

மிகவும் நல்ல நிலையிலுள்ள ITALY VESPA PX-150E எலக்ரோனிக் மொடல் ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு- 442, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (83023)

### தவறிவிட்டது

ஏழாலைமத்தி, ஏழாலையைச் சேர்ந்த பா.ஜெகாஷ் என்னும் பெயருடைய விசேட அடையாள அட்டை (இல.10906026309) சுன்னாகத்திற்கும் ஏழாலைக்குமிடையில் 08.01.2001 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் TN தொலைத்தொடர்பகம் மல்லாகம் எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். (83020)

காரைநகரைச் சேர்ந்த கனகசபை சிவஞானவதி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.326881260V) பொன்னாலைச் சந்திக்கும் காரைநகர் சிவன்கோயிலுக்குமிடையில் 08.01.2001இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க.ஏகாம்பரம், தபாற்கந்தோர், காரைநகரில் ஒப்படைத்துதவவும். (83026)

17, முதலாம் குறுக்குத்தெரு, மணியந்தோட்டத்தைச் சேர்ந்த யேசுதாசன் லெஸ்லி என்னும் பெயருடைய விசேட அ.அட்டை (இல.0901032459) மத்தியூஸ் வீதிக்கும் யாழ். பஸ்நிலையத்திற்குமிடையில் 12.01.2001 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 7/5 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைத்துதவவும். (83024)

### ஆங்கிலம் விசேடமாக

O/L, A/L, ஆண்டு 8 - 10, G.A.Q அடிப்படை அறிவிலிருந்து Grammar உடன் துரிதமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர் B.Sc. (Cey) London Inter 85,சிவன் கோயிலடி, (சிவன் கோயில் பின்புறம்), திருநெல்வேலி. (83031)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த யூ.கே.பி.ஆர் உள்ள எரிபொருள் விற்பனை நிலைய சொந்தக்காரரும், முகாரியும் 12இல் செவ்வாய் மகர நட்சத்திரத்தை உடையவரும், 1970 ஆம் ஆண்டு பிறந்தவருமாவார். திருமணம் செய்து யூ.கே கூட்டிச் செல்வார். சாதாரண ஆங்கிலம் பேசக்கூடிய குடும்பப்பாங்கான பெண் விரும்பத்தக்கது. சீதனம் எதிர்பார்க்கப்படும். மாதமுடிவில் யூ.கே திரும்புவார். ஜாதக விவரத்துடன் தொடர்பு:- விள.இல. 1188, மே/பா உதயன். (83039)

### தேவை

ரெலிகொம் தொலைபேசி இணைப்பு வைத்திருப்போர் உரிமை மாற்றம் செய்து விற்க விரும்பின் உடன் தொடர்பு கொள்க. விள.இல. 1189, மே/பா உதயன். (83059)

### புறொயிலர் குஞ்சுகள்

புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. விலை 55/- மட்டும். தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி (கிளீன் சொட் அருகில்), 123.A, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (83049)

## நகரில் இளைஞன் கைது

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த திங்களன்று மாலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் (பஸ் நிலையம் முன்) வைத்துக் கைது செய்யப்பட்டார்.

கணபதிப்பிள்ளை ரஞ்சித்குமார் என்பவரே கைது செய்யப்பட்டவராவார். இவர் கைது செய்யப்பட்டது தொடர்பாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அன்று இரவு நேரில் சென்று தகவல் தெரிவித்த இராணுவத்தினர் இவரின் கைது தொடர்பான ரிசிற்றையும் ஒப்படைத்துள்ளனர்.

இவர் தற்பொழுது யாழ்.நகரிலுள்ள 512ஆவது பிரிகேட்டில் தடுத்து வைத்திருப்பதாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ-5-173)

## திருவள்ளுவர் கட்டடம் திறப்பு விழா

வலி.தெற்கு,ஜன.1௦

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ள திருவள்ளுவர் கட்டடம், செயற்பாட்டறை மற்றும் புதிய விளையாட்டரங்கு என்பன இன்று வியாழக்கிழமை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட உள்ளன.

அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெற உள்ள இத்திறப்பு விழாவில் பாடசாலை வேலைகள் பொறியியலாளர் ஜி.சிவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

விசேட விருந்தினர்களாக ஜீ.ரி. சற் நிறுவன அலுவலர்களும், கௌரவ விருந்தினராக உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தனும் கலந்து கொள்கின்றனர். (ஐ-152)

## தையல் டிப்ளோமா பயிற்சி

நவாலி,ஜன.18

வடக்கு-கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படவிருக்கும் 2001ஆம் ஆண்டுக்கான தையல் டிப்ளோமா பயிற்சி நெறி எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகிலுள்ள பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகும்.

இந்தப் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களை அன்று காலை 9 மணிக்கு தமது கல்விச் சான்றிதழ்களுடன் சமுகம் தருமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ-100)


முந்திடும் இலவசம்

ஊர்காவற்றுறை எமிலியாஅஸ்பிள்ளை தொழில்நுட்பக்கல்லூரியில்

1. மின் இணைப்பு 2. மின் ஒட்டு
3. மீள முறுக்கல் 4. மரவேலை

கற்கைநெறிகளுக்கு விண்ணப்ப முடிவுதிகதி 25.01.2001

(83056) - இயக்குநர் -





மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட 2000ஆம் ஆண்டுக்கான இளைஞர் பரிசளிப்புப் போட்டிகளில் சாஸ்திரிய வாத்திய தனிவயலின் போட்டியில் பங்குபற்றி யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தையும் பெற்ற எமது காரியாலய எழுதுவினைஞர்

கலாவித்தகர்

செல்வி கணேஸ்வாமி வனஜா B.A(HONS)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உத்தியோகத்தர்கள்
கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களம்.
யாழ்ப்பாணம்.
(83055)



சுடர் ஒளி

ஆதரவுடன்

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க தூய விஞ்ஞானப் பிரிவினர்

யாழ்.றோட்டறிக் கழகத்துடன் இணைந்து நடத்தும்

பாடசாலை மாணவர்களுக்கான

இளம் ஆய்வாளர் விருது

மேற்படி விருதுக்குரிய விண்ணப்பங்கள் 22-01-2001 திங்கட்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

செயலாளர்,
யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்
தூய விஞ்ஞானப் பிரிவு,
தாவரவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
(C/14875)


# ஆசிரியர் கலாசாலை பெறுபேறு பெற்றுக் கொள்ள நடவடிக்கை

காரைநகர்,ஜன.18

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கலாசாலை இறுதிப் பரீட்சையில் சித்தியடையத் தவறி மீண்டும் இப்பரீட்சைக்குத் தோற்றி இதுவரை காலமும் பெறுபேறு கிடைக்கப்பெறாத ஆசிரியர்களின் பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்வதற்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இந்தப் பரீட்சைப் பெறுபேறுகளை விரைவில் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக இதுவரை பெறுபேறுகள் கிடைக்கப் பெறாத ஆசிரியர்கள் தங்கள் பரீட்சை சுட்டெண், தோற்றிய பாடங்கள் போன்ற விவரங்களை உடனடியாகக் கோப்பாய ஆசிரிய கலாசாலையில் சமர்ப்பிக்குமாறு கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி கேட்டுள்ளார். (ஐ-73)


இதய அஞ்சலி

எமது வித்தியாசாலையின் பரிசு நாளை வருடந்தோறும் நடத்த வழி வகுக்க வித்தியாசாலையின் தவப்புதல்வன் திரு.நா.காசிவிசுவநாதன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி சரஸ்வதி நாகலிங்கம்

அவர்களின் பிரிவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற வரதராஜப் பெருமாளைப் பிரார்த்திக்கின்றோம்.

வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை, பொன்னாலை.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(83058)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 25 - 11 - 1919



உதிர்வு 19 - 12 - 2000

அமரர் வி.க.இராசையா

(முன்னாள் மொரட்டுவ ரட்ணம்ஸ் உரிமையாளரும் சுழிபுரம் ரட்ணம்ஸ் உரிமையாளரும்)

அன்புக்கு இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய்
நல்வாழ்வு காட்டிய எம் அன்பு ஐயாவே!
மண்ணை விட்டு நீர் மறைந்தாலும் உம்மை
என்றும் எம் உள்ளத்தில் மறவோம்!

எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலமும், கடிதம் மூலமும், நேரிலும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் எமக்கு உடன் உதவியவர்களுக்கும் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு எதிர்வரும் சனிக்கிழமை (20-01-2001) நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
இ. இராசதுரை (மகன்)
'இராஜபவனம்'
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(83051)



மரண அறிவித்தல்

தியாகராசா பண்டிதவரதர்

(Retired Assistant Process Chemist, Paranthan - Chemical Factory)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தியாகராசா பண்டிதவரதர் அவர்கள் கனடாவில் 13.01.2001 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற தியாகராசா வரதநாயகம் தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி.பண்டிதநாயகி திஸராசாவின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற குருசாமி - ஞானேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், பரிமளகாந்தியின் அன்புக்கணவரும், யசோதா ஜெயகுமாரன்(கொ/முகத்துவாரம் இந்துக்கல்லூரி), யமுனா சிறீதரன்(கனடா), கோகுலன் (கனடா) ஆகியோரின் அருமைத்தந்தையும், ஜெயகுமாரன்(இலங்கை) சிறீதரன்(கனடா), வாசுகி(கனடா) ஆகியோரின் மாமனாரும் சாரங்கி, ஆரூரன், கீரன், சாமுகன், வைஷ்ணவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.01.2001) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
ந.ஜெயகுமாரன்.(மருமகன்)
இல.77/6 - 2/1, விஸ்ற்வைக் வீதி,
கொழும்பு - 15.
Tele - 525142

(C/14877)

### ஏழைகளைக் காப்பாற்ற

## அமெரிக்காவுக்கு 9கோடி டொலர் வழங்கப் போகிறாராம் சதாம்



பாக்தாத், ஜன. 18

ஏழை அமெரிக்கர்களுக்கு உதவுவதற்காக சுமார் 9 கோடி டொலர்களை அமெரிக்காவுக்கு தருவதாக ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் 3 கோடி மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்வதாகவும்—

அவர்களது வறுமையைத் தீர்க்க 9 கோடி 50 லட்சம் டொலர்களை ஈராக் வழங்கத் தயாராக உள்ளதாகவும்—

மனிதாபிமான அடிப்படையில் இந்த உதவிகளைச் செய்ய ஈராக் முன்வந்துள்ளதாகவும் சதாம் ஹுசைன் மேலும் தெரிவித்துள்ளார்.

குவைத்தை ஆக்கிரமிக்க முயற்சித்ததற்காக ஐ நா விதித்த பொருளாதாரத் தடைகளால் நலிந்த நிலையில் ஈராக் தற்போது உள்ளது

இந்த நிலையில், தனது பரம எதிரியான அமெரிக்காவை கிண்டல் செய்வதற்காகவே அதிபர் ஹுசைன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக கருதப்படுகிறது.

ஈராக் மீதான பொருளாதாரத் தடைகள் தொடர்ந்தும் நீடிப்பதற்கு அமெரிக்காவின் அழுத்தமே காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ-6)

### தேர்தலில் வென்று ஆட்சியமைத்தால்

## அ.தி.மு.க. முன்னணி சார்பில் ஜெயலலிதாவே முதல்வராம்!

சென்னை, ஜன. 18

தமிழகத்தில் நடைபெற உள்ள சட்ட சபைத் தேர்தலில் அ. தி. மு. க. முன்னணி சார்பில் தம்மைத் தவிர மாநில முதல்வராக வேறு எவரையும் முன்நிறுத்தும் பேச்சுக்கேஇடமில்லை என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலிலதா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

டான்சி நிலபேர ஊழல் வழக்கில் தமக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள போதும், அதிலிருந்து மீள சட்ட வழிகள் உண்டு என்றும் ஜெயலலிதா கூறியுள்ளார்.

ஆட்சியில் பங்கு வேண்டும் என்ற காங்கிரஸ், த.மா.கா. ஆகியவற்றின் கோரிக்கையை முற்றாக நிராகரிப்பதாகக்



கூறிய ஜெயலலிதா, அ. தி. மு. க. கூட்டணி ஆட்சியைப் பிடித்தால் கூட்டணி ஆட்சி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறியுள்ளார். இந்தியத் தேர்தல் விதிகளின்படி 2 ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது 3 ஆண்டுகள் தண்டனை பெற்றுள்ள ஜெயலலிதா தேர்தலில் போட்டியிடுவதே கேள்விக்குறியாக இருக்கும் போது. முதமைச்சராவது குறித்து அவர் உறுதியாக உள்ளது வியப்பளிப்பதாகக் கூறப்படுகிறது.

[ஓ]

### மெய்ப்பாதுகாவலரால்

## கொங்கோ அதிபர் சுட்டுக்கொலை!

கின்ஸாசா, ஜன. 18

கொங்கோ குடியரசின் அதிபர் லோறன்ற் கபிலா சுட்டுக் கொல்லப்பட்டார், அதிபரின் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவரே அவரைச் சுட்டுக் கொன்றதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1997 ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி மொபுட்டுவை பதவியிலிருந்து அகற்றிவிட்டு லோறன்ற் கபிலா ஆட்சியைக் கைப்பற்றி அதிபராகியிருந்தார்.

அப்போது ஸயர் என்ற நாட்டின் பெயரையும் கொங்கோ ஜனநாயகக் குடியரசு என்று அவர் மாற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஓ)

## ஜப்பானில் ஆளும்கட்சி உறுப்பினர் கைது!

டோக்கியோ, ஜன. 18

ஜப்பானில் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த மேல்சபை உறுப்பினர் சகாயோ குயாமா இலஞ்ச ஊழல் வழக்கில் கைதாகியுள்ளார்.

தொழிலாளர் நல அமைச்சின் அங்கிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஒரு அறக்கட்டளை அமைப்பிடமிருந்து குயாமா லஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

(ஓ-6)

## ஊழல் வழக்கை எதிர்கொள்ள இந்தோனேசிய அதிபர் மறுப்பு

ஜகார்த்தா, ஜன. 18

தன்மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் மீதான விசாரணைகளை எதிர்கொள்ள இந்தோனேசிய அதிபர் அப்துர்ரஹ்மான் வாஹிட் மறுத்து விட்டார்.

அதிபராகப் பதவியேற்ற குறுகிய காலத்துக்குள்ளேயே வாஹிட்மீது பல ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன.

அவற்றில் பெரும் தொகைப் பணத்தை லஞ்சமாகப் பெற்றதாகக் கூறப்படும் இரு தனித் தனிக் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்கள் இருப்பதாகக் கருதப்பட்டது.

இவை குறித்து நாடாளுமன்ற விசாரணைக் குழு இன்று விசாரிப்பதற்காக வாஹிட்டை சமுகமளிக்கும்படி கோரியிருந்தது.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவிடம் ஊழல் குற்றக் சாட்டுக்கள் தொடர்பாக விளக்கமளித்து விட்டதால், விசாரணைக் குழுவின் விசாரணைகளுக்கு ஒத்துழைக்க அதிபர் வாஹிட் மறுத்துள்ளார்.

[ஓ-6]

உலக அரங்கில்

### விமான நிலையத்தின் மீதான

## காஷ்மீர்த் தீவிரவாதிகளின் தாக்குதல்முயற்சிமுறியடிப்பு

ஸ்ரீநகர், ஜன. 18

காஷ்மீர் விமான நிலையத்தின் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதல் முயற்சியை இந்தியப் பாதுகாப்புப் படையினர் முறியடித்தனர். அப்போது நடந்த மோதலில் 4 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஸ்ரீநகரில் உள்ள தேசிய விமான நிலையத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இத்தாக்குதல்முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

வெடி மருந்துகள் ஏற்றப்பட்ட ஜீப் ஒன்றில் வந்த 4 தீவிரவாதிகள் விமான நிலையத்தின் பிரதான வாசல் மூலமாக உள்ளே செல்ல முயற்சித்தனர் அப்போது அங்கு காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் ஜீப்பைத் தடுத்துச் சோதனையிட முயன்ற போது 3 தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக கைபெறிகுண்டுகளை வீசித் தாக்கினர்

அதேசமயம் ஒரு தீவிரவாதி ஜீப்பை விமான நிலையத்துக்குள் செலுத்த முயற்சித்தார்.

இவர்களது முயற்சிகளை முறியடிக்க இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்.

இந்த மோதலில் மகளிர் படையைச்சேர்ந்த4பெண்கள் உட்பட 10 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானில் இருந்து செயற்படும் லஸ்கர்—இ. தொய்பா என்ற தீவிரவாத அமைப்பினர் இத்தாக்குதல் முயற்சிக்கு பொறுப்பேற்றுள்ளனர்.

இத்தகைய தாக்குதல் சம்பவங்கள், இந்திய அரசு மேற்கொண்டுள்ள சமாதான நடவ்டிக்கைகளைச் சீர்குலைக்கும் முயற்சி என்று காஷ்மீர் முதலமைச்சர் பரூக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

(ஓ – 6)

## ஐரோப்பிய ஒன்றியம் போன்ற ஆசிய அமைப்பு சாத்தியமில்லை

### ஜேர்மனிய அமைச்சர் தெரிவிப்பு

சிங்கப்பூர்சிற்றி, ஜன. 18

ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பலமான அமைப்பு ஒன்றினை ஆசியாவில் ஏற்படுத்துவது அடுத்து வரும் 20 ஆண்டுகளில் சாத்தியமில்லை.

சிங்கப்பூரில் தென்கிழக்காசிய ஆய்வகத்தில் உரையாற்றிய ஜேர்மனிய நிதி அமைச்சர் ஹான்ஸ்ஐகல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்;

அரசியல், கலாசார வேறுபாடுகளும் பொருத்தமற்ற பொருளாதாரக் கொள்கைகளுமே ஆசிய ஒன்றியத்தை உருவாக்குவதற்குத் தடைகளாக உள்ளன.

ஆசிய நாடுகளிடையே வேறுபாடுகள் அதிகமாக இருப்பதால் அவற்றுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது தற்போதைக்கு நிறைவேற்ற முடியாத ஒரு காரியமாக உள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் செயற்படுத்தியுள்ளது போல் பொதுவான ஒரே நாணய முறையோ, பொருளாதாரக் கொள்கைகளோ ஆசிய நாடுகளிடையே ஏற்பட வாய்ப்பில்லை.

இதனால் ஆசிய ஒன்றியம் அமைவதற்கு நீண்ட காலம் ஆகும்.

ஆயினும் ஆசியாவில் தடையற்ற வர்த்தக இணைப்பு ஒன்றைத் தற்போது ஏற்படுத்துவது சாத்தியமானதொன்றாகும்.

இத்தகைய வர்த்தக இணைப்பு, நிதிச் சந்தைகளின் ஒத்துழைப்பைப் பெற ஆசிய நாடுகளுக்கு உதவும் என்று தெரிவித்தார். (ஓ-6)

### முஷாரப்புடன் இந்தியத் தூதர் சந்திப்பு

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப்பை பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதர் நம்பியார் சந்தித்துப் பேசியுள்ளார்

காஷ்மீரில் தீவிரவாத நடவடிக்கைகள் அதிகரித்துவரும் வேளையில் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

## சுயநலத்துக்காக முஷாரப் இரகசியப் பேச்சு நடத்துகிறார்!

### பாக். மக்கள் கட்சி குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், ஜன. 18

சொந்த ஆதாயத்துக்காக இராணுவ முக்கியத்துவம் வாய்நத இடங்களை பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் இந்தியாவுக்கு தாரைவார்த்து விட்டதாக முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. அக்கட்சி இஸ்லாமாபாத்தில் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையிலேயே இந்தக் குற்றச் சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நலனைப் பொருட்படுத்தாது தனது சுயலாபத்துக்காக இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் ரகசியப் பேரங்களில் ஈடுபட்டு வருவதாகவும்.

இத்தகையதொரு ரகசியப் பேரத்தின் அடிப்படையிலேயே சிறையிலிருந்த பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் நவாஸ் ஷெரீப்பை விடுதலை செய்து நாட்டை விட்டுச் செல்ல முஷாரப் அனுமதித்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய, பாகிஸ்தானிய எல்லைப் பகுதியில் உள்ள இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதி ரகசிய பேரத்தின் பின்னர் இந்திய இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் கட்சி விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(ஓ-5)

### அமெரிக்காவில் புதிய அமைச்சர் மாற்றம்

வாஷிங்ரன், ஜன. 18

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியான புஷ் தனது அமைச்சரவையின் தொழில் அமைச்சராக எலைன் சாவோ என்பவரைப்பிரேரித்துள்ளார்.

முன்னர் புஷ் பிரேரித்த லிண்டா சாவெஸ் என்பவர் மீது சட்ட விரோதமாகக் குடியேறியவருக்கு உதவியதாகக் குற்றச்சாட்டு எழுந்ததை அடுத்தே சாவோவை புதிய தொழிலமைச்சராகப் புஷ் அறிவித்துள்ளார்.

## சீனாவின் ஆளில்லா விண்கலம் மீண்டும் பூமியை வந்தடைந்தது

சீனா விண்ணுக்கு அனுப்பிய ஆளில்லாத விண்கலம் பூமியைச் சுற்றிவிட்டு வெற்றிகரமாகத் தரையிறங்கியுள்ளதாக சீன வானொலி தெரிவித்தது.

சென்ஷேகா – 2 என்ற இந்த ஆளில்லாத விண்கலம் விண்ணில் பூமியை 108 தடவைகள் சுற்றிவிட்டு நேற்று முன்தினம் தரையிறங்கியுள்ளது.

விண்வெளிக்கு ஆள்களை அனுப்பும் சீனாவின் நடவடிக்கையில் இது இரண்டாவது முயற்சியாகும்.

1999 ஆம் ஆண்டு நவம்பரில் சென்ஷேகா—1 என்ற ஆளில்லாத விண்கலத்தை சீனா விண்ணுக்கு அனுப்பி நடத்திய சோதனைகள் வெற்றி பெற்றிருந்தன.

தற்போது இரண்டாவது சோதனைப் பயணமும் வெற்றியடைந்த நிலையில், அடுத்து வரும் சிலவருடங்களில் சீனா விண்வெளிக்கு ஆள்களை அனுப்பும் என்று சீன வானொலி மேலும் தெரிவித்துள்ளது.

## றீகல் வீடியோ

அலங்காரப் பந்தல்
பிளாஸ்ரிக் கதிரை, குசன் கதிரை
சமையல் பாத்திரம்
வீடியோ, நிழல் படம்

இவை அனைத்துக்கும் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

**றீகல் வீடியோ**

03, ஆஸ்பத்திரி வீதி,
(லைடன் சந்தி அருகில்) (83072)
கொட்டடி, யாழ்ப்பாணம்.



## கோழிப்பண்ணையாளருக்கு

பிரிமா முட்டையிடும் சிவப்பு பேட்டுக்குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் 18 - 01 - 2001 வர இருப்பதால் ஓடர்களை உடன் செய்து கொள்ளவும். குஞ்சுகளுக்கான தண்ணிக்கான்கள், மருந்து வகைகள் கோழித்தீன் வகைகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமகள் பண்ணை உற்பத்திக் களஞ்சியம்.**

418, கே. எஸ். வீதி,
சிவன் கோயிலடி.
யாழ்ப்பாணம். T. P. 3270 (83065)


## அறிவித்தல்

### பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனம்

மேற்படி நியமனத்தில் வெளிமாவட்டங்களுக்குத்தெரிவு செய்யப்பட்டுள்ள அனைவரையும் இன்று (18-01-2001) பிற்பகல் 1 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலுள்ள D.M.I. தனியார் கல்வி நிலையத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

– பட்டதாரிப் பயிலுநர்கள்.

(83062)

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

## வெள்ளி விழா ஆண்டு

### 19. 1. 2000 - 18. 1. 2001

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் வெள்ளிவிழா ஆண்டு இறுதித் தினம் இன்றாகும்.


எமது பாடசாலை இக்காலப் பகுதியில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் மேம்பாடு அடைந்து சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்று. யாழ். மாவட்டத்தில் சிறந்த ஆரம்ப முன்னோடிப் பாடசாலையாகத் திகழ்கின்றது.

வெள்ளிவிழா ஆண்டில் வசதியான ஒரு காணியைப் பெற்று எதிர்கால முன்னேற்றத்திற்கு தன்னைத் தயாராக்கியுள்ளது. எதிர்காலத்தில் சகல வளங்களும் பெற்று திகழ வாழ்த்துவதோடு இதன் முன்னேற்றத்தில் தம்மை அர்ப்பணித்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

– பாடசாலைச் சமூகம்.

(வி/14883)

## கண்ணீர் அஞ்சலி



### சுப்பு தங்கராசா

(கார் சாரதி - 3 Sri 5057)

14 – 01 – 2001 அன்று அகால மரணமடைந்த சுப்பு தங்கராசா அண்ணன் அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (18-01-2001) வியாழக்கிழமை நடைபெற இருப்பதால் உடன்பிறவாச் சகோதரர் அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

**கிளின்ரன் அந்தியகால சேவை நிர்வாகம்.**

548, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (83074)

## வீடியோ நாடா வெளியீடு

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் தயாரித்து நடித்த ''வெளிநாட்டு மாப்பிள்ளை'' என்ற நாடகத்தின் வீடியோ ஒளிநாடா வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கமும் கௌரவ விருந்தினராக வலி தென் மேற்கு பிரதேச சபை தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்ஸ்சனும் கலந்து கொள்வர். (உ-135)

## ஆசிரியர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 18

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தென்மராட்சிக் கிளையின் புனருத்தாரணக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டப் பொருளாளர் என் கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா பிரதம விருந்தினராகவும்—

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம், ஓய்வு பெற்ற அதிபர் சு. நடேசபிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இதேவேளை—

மேற்படி கூட்டத்தில் தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களையும் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-7)

## மீட்டல் வகுப்பு

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் iii க்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்படவிருக்கும் போட்டிப்பரீட்சைக்குத் தோற்றுவோருக்காக வடமாகாண ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துவரும் மீட்டல் வகுப்பு இன்று பிற்பகல்3 . 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ''விடய ஆய்வு'' என்ற பொருளில் யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. வரதராசாவும், நுண்ணறிவு குறித்து யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். இரவீந்திரனும் கருத்துரை வழங்குவர்.

நாளை வெள்ளிக்கிழமை நுண்ணறிவு, கிரகித்தல் ஆகியவற்றுக்கான வகுப்புக்கள் நடைபெறுமென வடமாகாண ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (உ-7)


## எங்கும் தமிழ்

18-01-2001 முதல்
PAPER CLASS
நாக. தமிழிந்திரன்
Note:
(i) 2002, 2003 மற்றும் 2001 மீட்டல் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
(ii) அச்சடித்த குறிப்புகள் வழங்கப்படும்.

பிரத்தியேகப் பிரிவு
Temple Road,
(G T Z அருகில்)
(83068)


## கண்ணீர் அஞ்சலி

எமது ஒன்றியத் தலைவர்
திரு. S. சுதாகரன் அவர்களின்
தந்தையார்

### சுப்பிரமணியம்

அவர்கள் 27-12-2000 அன்று இறைபதமெய்திவிட்டார். அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். இவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழகம்.**

(83075)

## மரண அறிவித்தல்கள்

### கைலாயபிள்ளை கனகரத்தினம்

(மந்துவில் கனகர் - Rtd. Internal Auditor, C.G R. Maradana)

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும கொண்ட கைலாயபிள்ளை கனகரத்தினம் அவர்கள் 16 – 01 – 2001 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ரங்கநாயகியின் (சதா) அன்புக் கணவராவார், இறுதிக்கிரியைகள் நேற்று (17-01-2001) வல்வெட்டியில் நடந்தேறின.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்:

தகவல்:
அ. மயில்வாகனம்
(மருமகன்)
மந்துவில், கொடிகாமம்.

தற்காலிக முகவரி:
வேவில் பிள்ளையார் கோயிலடி,
வல்வெட்டி. (83066)

### திருமதி சிவசங்கரன் இராசம்மா

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசங்கரன் இராசம்மா 17 - 01 - 2001 நேற்றுக் காலமானார்.

அன்னார் சிவசங்கரனின் அன்பு மனைவியும், சிவராஜன் (கணேசன் களஞ்சியம், திருநெல்வேலி), கணேசராஜா (கணேசன் றேடர்ஸ், கொழும்பு), காலஞ்சென்ற சிவசக்தி, காலஞ்சென்ற சண்முகராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவனேஸ்வரி, பிரேமகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும், தேனுகன், சதுர்ஷன், தர்மீகன், யதீஸ்வரன், ஆரணி, யதுர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, ஞானம்மா, வைத்திலிங்கம், குழந்தைவேலு ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாராயணன், காலஞ்சென்ற சாம்பசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலியில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (18-1-2001) நடைபெற்று பூதவுடல் பி.பகல் 4 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சிவராஜன்
(மகன்)
கணேசன் களஞ்சியம், திருநெல்வேலி.

மதவடிலேன்,
திருநெல்வேலி. (83070)

### திருமதி தம்பிராசா யோகம்மா

திருமதி தம்பிராசா யோகம்மா அவர்கள் நேற்று (17 – 01 - 2001) இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவனடியார் - கண்மணி தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்ற தம்பு தம்பிராசாவின் மனைவியும் அருள்நாயகி (கொழும்பு), விஜயகாந்தன், ஜீ. ஜெயரட்ணம், ஜெயசீலன் (ஜேர்மனி), யோ. ஜெயந்தி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும் க. ஜீவகாருணியம் (C.T B. கோண்டாவில்), யோகலிங்கம் (ஜெயம்), காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் ஈஜ. ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்றவர்களான சின்னராசா, தர்மலிங்கம், செல்லத்தம்பி, இரத்தினம், தவமணி மற்றும் சி. இராசதுரை (கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ரஞ்சனிதேவி (கொழும்பு), லதக்குமார் (ஜேர்மனி), தேவகுமார் (ஜேர்மனி), மேகனலதா (பிரான்ஸ்), கவீஸ்வரன் (சுவீஸ்), மதீஸ்வரி (கொழும்பு) சுதாகஸ்வரன் (இந்தியா), காலஞ்சென்ற துசாகஸ்வரன் ஆகியோரின் பெரியதாயாரும் கு. சரஸ்வதியின் (கொழும்பு) மைத்துனியும் யசீந்திரன் (லண்டன்), சுகிந்திரன் (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் கஜந்தினி (வேம்படி ம. க.), ஜெயபாலி, ஜெனனி (ஜேர்மனி) அகிலன் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (18-01-2001) இன்று பி. ப. 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(83076)

த. விஜயகாந்தன்
(மகன்)

# எழுச்சி நிகழ்வு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாத்வீக முறையில் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 'பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு' என்ற சமாதானத்திற்கான நிகழ்வில் கலந்து கொள்வதற்கென, இந்து - கிறிஸ்தவ மதத்தலைவர்கள், அருட்சகோதரிகள், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பல்கலைக்கழகம் நோக்கிச் சென்றனர்.

ஆனால், இராமநாதன் வீதியில் வளாக வாசலுக்கு அண்மையில் அமைக்கப்பட்டிருந்த வீதித்தடையடியில் பொலீஸாரால் அவர்கள் தடுக்கப்பட்டனர்.

அவ்வாறு தடுத்த பொலீஸ் அதிகாரி "பல்கலைக்கழக மைதானத்தில் இன்று இடம்பெறும் நிகழ்வு பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாத்திரமே" என்று கூறினார்.

அதற்கு "இந்நிகழ்வு சமாதானத்துக்காக - சாத்வீக வழியில் - நடைபெறும் நிகழ்வானதால் இதில் பங்கு பற்ற விரும்புகிறோம்" என்று ஒரு மதத் தலைவர் கூறினார்.

இதற்கு கொடுக்கப்பட்ட பதில் "பொதுமக்கள் இதில் பங்குகொள்ள முடியாது" - என்பதாகும்.

"மதத் தலைவர்களாவது கலந்து கொள்ள முடியாதா?" என்று கேட்டபோது அதே பதிலைத்தான் பொலீஸார் மீண்டும் கூறினர்.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கென சென்ற வயோதிபர் உட்பட கணிசமான அளவு பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், சில பல்கலைக்கழக மாணவர்களும் அவ்விடத்தில் தடுக்கப்பட்டு நின்றனர்.

மேற்படி தலைவர்கள் இராசாவின் தோட்டம் வீதியில் அமைந்திருக்கும் மனிதநேய அமைப்புகள் ஒன்றியத்தின் அலுவலகத்துக்குத் திரும்பிச் சென்று பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு தொடர்பான விடயங்களை கலந்தாலோசித்தனர். நண்பகல் 12 மணி தொடக்கம் பத்து நிமிடங்கள் மௌனப் பிரார்த்தனையிலும் அவர்கள் ஈடுபட்டனர்.

இக்கலந்துரையாடலின் போது சில முக்கிய கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வானது சமாதானத்தை நோக்கிற் கொண்டு சாத்வீக முறையில் ஒழுங்கு படுத்தப்பட்டதோர் நிகழ்ச்சி. எவருக்கும் எதிர்ப்போ கண்டனமோ அங்கு தெரிவிக்கப்படமாட்டாது என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. நிரந்தர சமாதானம், போர்நிறுத்தம், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தினூடனான பேச்சுவார்த்தை, சுயநிர்ணய உரிமை ஆகிய விடயங்கள் பற்றி தமிழ் மக்களின் அபிலாஷைகளை அமைதி முறையில் ஒரே குரலில் வெளிப்படுத்துவதே இந் நிகழ்வின் நோக்கம்.

இவ்வித தன்மைகளைக் கொண்ட நிகழ்வில் பொதுமக்கள் கலந்து கொள்வது தடைசெய்யப்பட்டமை பெரும் வேதனைக்குரிய விடயம்.

அதுவும் கண்ணீர்ப் புகை, குண்டாந்தடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் என்ற மிரட்டல் வார்த்தைகளுடன் அனுமதிக்க மாட்டோம் என்ற அடக்குமுறையில் அது தடை செய்யப்பட்டது மனதில் பல ஐயங்களை எழுப்புகின்றது.

யாழ்.குடாநாட்டில் ஜனநாயகம் நிலவுகின்றதா?, சிவில் நிர்வாகம் நடக்கின்றதா?

பேச்சுச் சுதந்திரம், கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் - இச் சுதந்திரங்கள் எல்லாம் இங்கு உள்ளனவா?

அஹிம்சைக்கு இடமில்லையா?

தெற்குக்கு ஒரு நீதி; வடக்கிற்கு ஒரு நீதியா?

எமது மண்ணில் 'சமாதானத்திற்கான போர்' என்று அரசு முன்னெடுத்துக் கொண்டிருக்கும் போர் உண்மையாகவே சமாதானத்துக்காகவா, அழிவுக்காகவா?

கடந்தகாலத்தில் தமிழ் மக்களின் அஹிம்சைப் போராட்டம் உதாசீனம் செய்யப்பட்டதால் ஆயுதப்

(12ஆம் பக்கம் பார்க்க)




யாழ்.பரமேஸ்வராச் சந்திக்கு சமீபமாக அமைக்கப்பட்டிருந்த தடை நிலையத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் சோதனை செய்யப்பட்டு முட்கம்பிகளுக்கு அருகில் உள்ள சிறு இடைவெளி ஊடாக உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.



யாழ்.பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் உள்ள தடை நிலையத்தில் சோதனையில் ஈடுபட்ட பொலீஸாருக்கும் மாணவருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுத் தர்க்கம் ஏற்பட்ட சமயம் நமது படப்பிடிப்பாளர் 'கிளிக்' செய்தார்.



பரமேஸ்வராச் சந்தி தடை நிலையத்தில் வைத்துப் பொலீஸாரால் திருப்பி அனுப்பப்பட்ட பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் ஆங்காங்கே நிற்பதையும் திரும்பிச் செல்வதையும் காணலாம்.



எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்ட மதகுருமார்களில் சிலர்.

# மரண அறிவித்தல்கள்

## சூசைப்பிள்ளை சந்தியாப்பிள்ளை
(சில்லாலை)

சில்லாலையைச் சேர்ந்தவரும் தற்போது நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட சூசைப்பிள்ளை சந்தியாப்பிள்ளை நேற்று (17-01-2001) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி விற்றுவாரின் (பொன்னம்மா) அன்புக் கணவரும், பற்றிமாராணி, காலஞ்சென்றவர்களான மரியதாசன், ரூபி ஆகியோரின் தந்தையும், மகேந்திரனின்(யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(18-01-2001) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலியின் பின் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.42, இராச வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(83082)

தகவல்:
M.யூட் சுதர்சன்
(பேரன்)

## சபாபதிப்பிள்ளை பாலசிங்கம்

கலைமணி வீதி, கட்டப்பிராயைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் நேற்று (17-01-2001) காலமாகிவிட்டார்.

அன்னார் சபாபதிப்பிள்ளை - செல்லம்மாவின் அன்புமகனும், காலஞ்சென்ற பூதத்தம்பி-செல்லமுத்து ஆகியோரின் மருமகனும் கனகமணியின் அன்புக் கணவரும், சத்தியருக்குமணி(கனடா), சிவலிங்கம்(கொழும்பு), இராசம்மா, இராசையா, இரத்தினம், நவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசபாலன்(ஜேர்மனி), சாந்தி(சுவிஸ்), பாலச்சந்திரன் (ஜேர்மனி), பாலகுமார், சஜந்தா(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி - 2003 A/L) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவாயினி, குணராஜ், பிலோமினா(பிருந்தா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரங்கன், கயல்விழி, கபிநயா, சிவகஜன், கௌதமி, திலக்ஸன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-01-2001) பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று திருநெல்வேலி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*கலைமணி வீதி,*
*கட்டப்பிராய்,*
*யாழ்ப்பாணம்.*

(83073)

தகவல்:
குடும்பத்தினர்.

## அனஞ்சித்தேவர் சத்தியமூர்த்தி
(சிவன் மிக்சர் உரிமையாளர்)

கண்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் தற்போது கன்னாதிட்டி வீதி சிவன்கோயிலடியில் வசித்தவருமாகிய அனஞ்சித்தேவர் சத்தியமூர்த்தி நேற்று (17-01-2001) காலமானார்.

அன்னார் அனஞ்சித்தேவர் - தனலட்சுமியின் அன்பு மகனும், விஜயராணியின் பாசமிகு கணவரும், பசுபதியின் அன்புச் சகோதரனும், சர்வானந்தன், சரோஜினி, இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் தந்தையும் கணேசமூர்த்தி மனரஞ்சினியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-01-2001) பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*கன்னாதிட்டி வீதி,*
*சிவன் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

(83083)

தகவல்:
இராமச்சந்திரன்
(மகன்)

# ஆஸ்திரேலியாவிலும் 'பொங்கு தமிழ்' நிகழ்வு



யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்துக்கு முன்பாக மெல்போர்ன், சிட்னி பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 400ஈழ மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது எடுக்கப்பட்ட படம். இதேபோன்று 250 மாணவர்கள் பங்குபற்றிய ஆர்ப்பாட்டம் ஒன்று அங்குள்ள ஸ்ரீலங்கா தூதரகம் முன்பாகவும் நேற்று இடம்பெற்றது.

# குடாநாட்டில் வழமைநிலை பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ்பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து யாழ். நகரப்பகுதியிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

நகரப்பகுதியிலுள்ள அரச வங்கிகள், அரச அலுவலகங்கள் திறக்கபட்டிருந்த போதும் வாடிக்கையாளர் மற்றும் மக்கள் செல்லாததனால் அவை செயல் இழந்திருந்தன.

பாடசாலைகள் அனைத்தும் கூட செயலிழந்தன. பாடசாலைகளுக்கு மிகக் குறைந்த எண்ணிக்கை மாணவர்களே சமுகமளித்திருந்தனர். இதனால் கல்விச் செயறபாடுகள் யாவும் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைக்கு வந்த உயர் வகுப்பு மாணவர்களும் நேரகாலத்தோடு பல்கலைக்கழகம் நோக்கிச் சென்றனர்.

இதேவேளை நகரப்பகுதியில் பொதுமக்களின் நடமாட்டமும் நண்பகல் 12.30 மணிவரை குறைந்து காணப்பட்டது.

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்ள வர்த்தகர்கள், வர்த்தக நிறுவன ஊழியர்கள், பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கு அனுமதி மறுக்கப்பட்ட போதும் மக்கள் அனைவரும் உணர்வுடன் தமது ஆதரவையும் ஒத்துழைப்பினையும் வழங்கியதாக எமது பிரதேச செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.(உ-ம-5)

# பொது மக்கள் பங்குபற்றுவதை பொலீஸார், படையினர் தடுத்தனர்

யாழ்ப்பாணம்,ஜன.18

'பொங்கு தமிழ்' நிகழ்வில் கலந்து கொள்வதற்கு வந்த மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் பொலீஸாராலும் படையினராலும் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வந்த மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் பரமேஸ்வராச் சந்தியில் இராமநாதன் வீதியில் போலீஸாரால் போடப்பட்டிருந்த தற்காலிக சோதனை நிலையத்தில் வைத்துத் திருப்பியனுப்பப்பட்டனர்.

பாடசாலைகளிலிருந்து நிகழ்வில் கலந்துகொள்ள வந்த பாடசாலை மாணவர்கள் பல நூற்றுக்கணக்கானோர் பிறவுண் வீதி, ஆத்திசூடி வீதி, குமாரசுவாமி வீதி, பரமேஸ்வராச் சந்தி ஆகியவற்றில் வைத்துத் தடுத்து நிறுத்தப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

மாணவர்கள் சிலர் தடைகளை மீறி வேறு பாதைகள் வழியாக வந்து நிகழ்வில் கலந்து கொள்ள முயன்ற சமயம் அவர்களைத் தடுத்து நிறுத்திய பொலீஸார் பல்கலைக்கழகத்துக்கு முன்னாலுள்ள ஒழுங்கையினுள் தடுத்து வைத்தனர்.

சுமார் '2' மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். எனினும் அவர்களது சைக்கிள்களின் காற்றுத்திறக்கப்பட்டு 'வால்வ்' கட்டைகள் பிடுங்கி வீசப்பட்டிருந்ததாக மாணவர்கள் தெரிவித்தனர். சுமார் 100 சைக்கிள்களில் இவ்வாறு காற்றுத் திறக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. பல்கலைக்கழகச் சுற்றாடலில் பாடசாலை மாணவர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் சூடான வாய்த்தர்க்கம் இடம்பெற்றதையும் காணமுடிந்தது.

பரமேஸ்வராச் சந்தியில் பல்கலைக்கழக மாணவர்களின் அடையாள அட்டையைப் பரிசோதித்த பொலீஸார் சிலர் அட்டையின் காலாவதித் திகதி பற்றித் தவறாக விளங்கிக் கொண்டு மாணவர்கள் பலரைத் தடுத்துத் திருப்பியனுப்பினர். இதை அறிந்து அங்கு வந்த மாணவர் மன்றப் பிரதிநிதிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிக் கைகலப்பாக மாறும் சூழ்நிலை ஏற்பட்டது.

அதைப் படம் பிடித்த உதயன் ஆசிரிய பீடப் பிரதிநிதி ஒருவரை அங்கு கடமையில் நின்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் கடுமையான தொனியில் பேசித்தாக்க முற்பட்டார். எனினும் உயர் பொலீஸ் அதிகாரி ஒருவரின் தலையீட்டால் தாக்குதல் தவிர்க்கப்பட்டது.

இதேவேளை -

வடமராட்சியிலிருந்து வந்த பொதுமக்களும் மாணவர்களும் நீர்வேலி மற்றும் நெல்லியடிப் பகுதிகளிலும் -

வலிகாமத்திலிருந்து வந்தவர்கள் இணுவில், மருதனார்மடப் பகுதிகளிலும் -

படையினரால் நீண்ட நேரம் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தனர்.

இன்றைய வீடியோ CD வெளியீடுகள்
விஜயகாந்த், ரம்யாகிருஷ்ணன்
✹ வாஞ்சிநாதன்
அஜித்,லைலா
✹ தீனா
சத்தியராஜ்,ரோஜா
✹ லூட்டி
கரண்,ரம்யாகிருஷ்ணன்
✹ நாகேஸ்வரி
பிரதிகள் உடன் பெற்றுக் கொள்ளலாம்.
விஷ்ணு வீடியோ
K.K.S.றோட், கோண்டாவில்.
(83081)

எமது வீடியோ CD வெளியீடுகள்
தீனா
வாஞ்சிநாதன்
நாகேஸ்வரி
லூட்டி
பிரதிகளை உடன் பெற்றுக் கொள்ளலாம் ரூபா 250/=
இப்படத்தின் வீடியோ CDகள் விற்பனைக்குண்டு ரூபா 1000/=
அல்டி எலக்ரோனிக்ஸ், NO.15. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி.14887)

## எழுச்சி நிகழ்வு.....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். இப்போதும் அஹிம்சைக்கு வழங்கும் பதில் அடக்குமுறையென்றால்,மக்கள் குறிப்பாக இளம் வயதினர் தமது அபிலாஷைகளை வெளிப்படுத்தவும் உரிமைகளைப் பெற்றனுபவிக்கவும் எந்த வழியை அரசு எதிர்பார்க்கிறது.

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு நடந்தேறிய முறையை நோக்கும் போது அது மாபெரும் வெற்றியே.

பல்கலைக்கழக சமூகத்தினர் குறுகிய காலத்தில் கடும் முயற்சியெடுத்து குடாநாட்டின் மூலைமுடுக்குகளுக்கும் சென்று மக்கள் மனதில் விழிப்புணர்ச்சியை பெருமளவு வளர்த்தது ஒரு மாபெரும் வெற்றி. மேலும் பொதுமக்களை ஆயுத முனைக்குப் பலிக்கடாக்களாக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்தமை, பொறுப்புணர்ச்சியுடனும், சாதுரியத்துடனும், சாத்வீகத்தைப் பேணும வகையிலும் மேற்கொள்ளப்பட்ட பாராட்டுக்குரிய வெற்றியாகும்.

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் பொதுமக்கள் கலந்து கொள்வதை அரச இயந்திரங்கள் நசுக்க முற்பட்ட போதிலும், யாழ்குடாநாடு முழுவதிலும் பரவலாக மக்கள் சுயமாக முன்வந்து தத்தம் இடங்களில் கடைகளை மூடியும், சந்தைகள் கூடாமலும், தொழில்களுக்குச் செல்லாமலும், பாடசாலைகளைப் பகிஷ்கரித்தும், தனியார் போக்குவரத்துச் சேவையை நிறுத்தியும் நண்பகல் பன்னிரண்டு மணிப் பிரார்த்தனையில் ஈடுபட்டும் தேவாலயங்களில் மணிகள் ஒலிக்கச் செய்தும் உணர்வுபூர்வமாக தமது பங்களிப்பைச் செய்துள்ளனர். இது 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்குக் கிடைத்த இன்னுமொரு வெற்றி.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2 அதிகாரிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப்பிரதேசத்தைப் படையினர் பலப்படுத்தி வருகின்றனர் என்றும் -

தகவல் நிலையம் தெரிவித்தது.

இரு தினங்களில் இடம்பெற்ற சண்டைகளில் இரு அதிகாரிகளும் 52 படையினரும் உயிரிழந்ததாகவும் 9 அதிகாரிகளும் 227 படையினரும் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் 40 பேர் உயிரிழந்ததாகவும் தகவல் நிலையம் அறிவித்தது. இதுவரை இந்தச் சண்டையில் 60 படையினர் உயிரிழந்ததாகவும் 281 பேர் காயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

(உ-3-10-15-17-133-86-173)

## பொங்கு தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டினை - பெருவிருப்பினை - அபிலாஷைகளை பிரதிபலிக்கும் -

தமிழ்த்தேசியம்

மரபுவழித்தாயகம்

சுயநிர்ணயம்

இவற்றினை அங்கீகரிக்கும் நீதியானதோர் அரசியல் தீர்வினை நாம காணவேண்டும்.

சர்வதேச சமூகமே!

நீண்டகால அடக்குமுறைக்குள் பயந்து உறைந்து போயுள்ள எமது மக்களின் உண்மையான மன உணர்வுகளை அபிலாஷைகளை உரியவாறு நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீதியான அமைதியான எங்கள் வாழ்வுக்கான தீர்வினைக் காண்பதில் உங்கள் மனச்சாட்சி உரியவாறு பேசவேண்டும்.

என்று யாழ்.பல்கலைக்கழகச் சமூகத்தின் சார்பில் விடுக்கப்பட்ட அந்தப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
விஜயகாந்த், ரம்யாகிருஷ்ணன்
✹ வாஞ்சிநாதன்
அஜித்,லைலா
✹ தீனா
சத்தியராஜ்,ரோஜா
✹ லூட்டி
விவேக், வடிவேலு
✹ நாகேஸ்வரி
(பிரதிகள் உடன் பெறலாம்.)
வீடியோ விஷன்
யாழ்ப்பாணம்.
(சி14886)

## பொலீஸாருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய வீதிகளில் பொலீஸாரும், படையினரும் தமது சோதனைகளைத் தீவிரப்படுத்தியிருக்க பல்கலைக்கழகத்தைச் சூழ இருந்த சிறிய ஒழுங்கைகள் மற்றும் வீடுகள் ஊடாக இவர்கள் பல்கலைக்கழக சுற்று மதிலருகே சென்று, மதில் பாய்ந்து நிகழ்வில் பங்கேற்றனர்.

ஆங்காங்கே தமது சைக்கிள்களை விட்டு விட்டு இவ்வாறு மதிலேறிப் பாய்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட சுமார் நூறு பேரின் சைக்கிள்களைப் படையினர் லொறி ஒன்றில் ஏற்றிச் சென்றனர். பின்னர் உரியவர்களிடம் சைக்கிள்கள் ஒப்படைக்கப்பட்டன. (உ-ம-5)

## உணர்ச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள வீதிகளில் கடும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பல்கலைக்கழக அடையாள அட்டைகளுடன் வந்த மாணவர்கள் மட்டுமே துருவித் துருவி அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்ட பின் பல்கலைக்கழக வளாகத்துக்குள் புக அனுமதிக்கப்பட்டனர். காலாவதியான தமது அடையாள அட்டைகளில் புதுப்பிப்பதற்கான திகதி மற்றும் ஒப்பங்களைப் பெறத் தவறிய மாணவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

யாழ்.பல்கலைக் கழகத்துக்குள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அதிகாலை முதலே மாணவர்கள் அதிக சிரத்தை எடுத்ததை காணக்கூடியதாக இருந்தது. வளாகத்துக்குள் மாணவர்கள், பொதுமக்கள் என்ற பெயரில் நுழைபவர்கள் குறித்து அவர்கள் அவதானமாக இருந்ததையும் காண முடிந்தது.

ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட எம்.பியான தி.மகேஸ்வரன் காலையில் மைதானத்துக்கு சமுகம் தந்து, மாணவப் பிரதிநிதிகளுடன் உரையாடி எழுச்சி நிகழ்வுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தினார்.

பல்கலைக்கழக முன் மைதானம் முழுவதும் சிவப்பு, மஞ்சள் நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எழுச்சி நிகழ்வு உரைகளை நிகழ்த்துவதற்காக விசேட மேடை அமைக்கப்பட்டிருந்தது.

விளையாட்டு மைதான பார்வையாளர் மண்டபத்தில் காலை 10.30 மணிக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

எழுச்சி நிகழ்வுகள் ஒரு புறம் நடக்க அருகிலிருந்த மண்டபக் கூரை மீது யாழ்மக்களின் அவல நிலையை நாடகப் பாணியில் மாணவர்கள் நடித்துக் காட்டினர்.

மைதானத்தின் நடுப்பகுதியில் சுற்றிவர முள்வேலி போடப்பட்டு உள்ளே தொலைக்காட்சி, குளிர்சாதனப்பெட்டி, தொலைபேசி, மின்விசிறி, மோட்டார் சைக்கிள் உட்பட மின்சாரப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன.

இந்தப் பொருள்களில் சுகம் காணும் மக்கள் கூட்டமும் அங்கே காண்பிக்கப்பட்டது.

இவ்வாறான சுக வாழ்க்கை வாழ்கின்றபோது சுற்றிவர முட்கம்பியினால் அடைக்கப்பட்ட அடிமை வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதனை உணர்ந்த அக் கூட்டத்தினர் இந்தப் பொருள்களை உடைத்தெறிந்து முட்கம்பிகளைப் பிரித்துக் கொண்டே 'சுதந்திரமாக வாழ்வோம்' என்று வெளியேறும் காட்சி யாழ்ப்பாண மக்களின் வாழ்வை படம் பிடித்துக்காட்டியது. எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டவர்களை இராமநாதன் வீதியில் இருந்து கம்பி வேலிகள் ஊடாக இராணுவத்தினர் படம் எடுக்க முற்பட்டபோது வேலியின் முன்பாக மறைப்பு ஒன்றினைப் போட்டு படம் எடுக்கும் இராணுவத்தின் முயற்சியைத் தடுத்தனர்.

பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் கறுப்புத் துணியால் தமது வாயை மூடிக்கட்டியபடி நிகழ்வில் பங்குபற்றினர்.

நேற்றுக்காலை முதலே பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஒலிபெருக்கி மூலம் இசைக்கப்பட்ட எழுச்சிப் பாடல்கள் யாழ். நகரப் பகுதி வரை ஒலித்தன.

நண்பகல் 12மணிக்கு பரமேஸ்வரன் ஆலயத்தில் மணி ஒலிக்க நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் எழுந்து நின்று தமிழ் மக்களின் அபிலாஷையை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தினர்.

பின்னர் எழுச்சிப் பாடல்கள் பாடப்பட்டன. நண்பகல் 12.30 மணியளவில் எழுச்சி நிகழ்வு நிறைவுற்றது. (உ-ம-3-5-6-10-15-17-72-73-86-109-117-139-173)

கிறிஸ்தவம்
ரஜீகன்
B.A (Hons)
சனி - ஞாயிறு
2001 - 8-9
2003 - 9-10
2002 - 1-2
பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்.
(82994)

A/L 2003
கணக்கீடு
D.SAM
பிரிவு I. க்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
பிரிவு II ஆரம்பம்
20- 01- 2001
11மணி
DMI
யாழ்நகர்
குறிப்பு:- O/L இல் வர்த்தகம் கற்காத மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(C/14841)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைச் சர்வதேசக்குழுவால் நேற்றுப் பொறுப்பேற்கப்பட்டன. அவை படகுகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு கல்முனை - பள்ளிக்குடாவில் வைத்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்தச் சடலங்களைப் படையினரின் வாகனங்களில் இருந்து ஆஸ்பத்திரி ஊழியர்கள் இறக்கிக் கொண்டிருந்த சமயம் அந்தச் சடலங்களில இருந்து 2 கிரனேட்டுகள் வீழ்ந்ததாகவும் இதனால் அச்சம் கொண்ட ஊழியர்கள் பீதியால் சிதறி ஓடினர் என்றும் இவ்வாறு ஓடிய ஊழியர் ஒருவர் கீழே வீழ்ந்து காயமடைந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

விக்னா
கல்வி நிறுவனம்
அளவையியல்
திரு.சயந்தன்
A/L 2002
குறியீட்டுயளவையியல்
✲Sat,Sun 8மணி
புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்
(83015)

கணக்கீடு
B.முகுந்தன்
(B.B.A. (HONS) F.m (Spl.)
A/L 2001
கிரயக்கணக்கீடு
A/L 2002
வங்கி இணக்கக்கூற்று
ஆரம்பம்: 19-01-2001
சக்தி கல்வி நிலையம்
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.
(83025)

[illegible] சினிமா
ஸ்ரான்லி வீதி
விஜயகாந்த், நாசர், ரம்யாகிருஷ்ணன் நடித்த
வாஞ்சிநாதன்
(CD பிரதி)
புதிய வெளியீடு
10.30, 2.30 (பகல்)
(சி14868)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.